உ

திருவருள் துணை.

ஆறைமாநகர்

சாமிநாதப்பிள்ளையென்னும்,

தெய்வச்சிலையாபிள்ளையவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

மநுநீதிகாதல்.

இஃது

மணிமங்கலம்.

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்.

P. N. C. கடைக்காரியம்.

N. குருசாமிநாயுடு அவர்களால்

பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியா ரவர்கள் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1901.

சென்னை-பிரம்பூர்குயப்பேட்டை 65-வதுநெ-வீடு.

உ

கடவுள் துணை.

கேட்லாக்கிலுள்ள சாமான்களின்

விளம்பரம்.

கனவான்களே! சென்னை பிரம்பூர் குயப்பேட்டை படவெ ட்டம்மன் கோவில் தெருவு 64-வது நெம்பருடைய வித்தியாரத் னாகர அச்சுக்கூடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வி-பி கம்பெனியில் த ழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்குமுதலிய புஸ்தகங்களும் ஸ்மார்த வைஷ்ணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும் பால்யர்களுக்கு வே ண்டும் காலேஜிப் புஸ்தகங்களும் உத்தியோகஸ்தர்களுக்கு வே டும் ஆக்டுபுஸ்தகங்களும், இசுலாமானவர்களுக்கு வேண்டும் தமி எழுத்தில் துலுக்குபுஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர்.யா ருக்கும் வேண்டும் இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அ மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோ வை, தூது, வெண்பா, சதகம், கும்மியெனும் அனேகம் தின களும், அத்வைத சாஸ்திரமும், ஆறுமுகநாவலர் புஷ்பரத செட் டியார் சை-இரத்தினசெட்டியார் இவர்களுடைய அச்சுக்கூடங்கள் பதிப்பித்த உயர்ந்த புஸ்தகங்களும், வியாதிகள் சொஸ்தப்படும்ப தக்க அவிழ்தங்களும், அவரவர் பேர்களுக்குத் தக்கதாய் ரொப வும் அழகான வேலைசெய்த றப்பர் சீல்களும், ஜெர்மன் சில்வரா செய்த நகைகளும், சாமான்களும், நல்ல வாசனைபொருந்திய தாய நாள்படயிருந்தால் கெடாமலிருக்கும்படியாயும், உள்ள அத்தர் தி சுகளும், பூசு பில்லைகளும், வாசனை வத்திகளும் இவைக ளெல்லா தயாரா யிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எனது பே விலாசத்திற்கு எழுதினால் உடனே வி-பி தபாலில் அனுப்பக்கூ என்னுடைய கேட்லாக்கு வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு னுப்பினால் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷயந் தெரியும்படி தெளி ய் ஒவ்வொரு முறையிலும் தங்கள்பெயர் ஊர், இருப்பிடம், ஸ்டாபீஸ், தாலுக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தை ட்டாய மெழுதவேண்டும்.

வித்தியாரத்னாகர அச்சுக்கூடத்தலைவர்

பெரம்பூர்போஸ்டு மதராஸ்.

☞ பி. நா. சிதம்பரமுதலியார்.

உ

கடவுள் துணை.

மநுநீதிகாதல்.

விநாயகர்துதி.

யானைமுகவானையுமை யாளனார்பாலகனே
ஞானமுதலானகுருநாதனே - மாநிலத்தில்
ஆதிமனுநூலினுரை யாததனையானுமொரு
காதலெனவோதவருள் காண்.

புத்திவருமெஞ்ஞானப் போதமுறும்புண்ணியமுஞ்
சத்தியமாமேன்மைமிகத் தங்குமே - நித்தநித்தம்
சாதினையதாய்ப்புவியில் சாமிநாதன்சொல்மனு
நீதிநூல்பார்த்தால் நிதம்.

வாணிதுதி.

பூமேவுலோகம் புகழுமநுநீதிநூல்
பாமேவுசெஞ்சொற் பயனறிந்துயான்பாட
மூலகணேசன முளறிபதம்போற்றி
வாலைசரஸ்வதியென் வாக்கிலிருந்தருள்வீர்.

அவையடக்கம்.

வேதமுறைசொன்னதிந்த மேதினியிலுள்ளமநு
நீதிமுறைதன்னை நிகழ்த்தினார்முன்னோர்கள்

வள்ளுவனாரௌவைமுதல் வழுத்துமநுநீதி
தெள்ளுதமிழ்க்கடலிற் சிற்றகப்பைமுகந்தாற்போல்

மாலைசதக மநுநீதிசாரமென்றும்
ஞாலமதிற்கவிஞர் நவின்றார்பலநூலால்

பண்ணும்பலநூலிற் பாடும்பொருளதனை
எண்ணியென்தன்சிந்தைக் கிசைந்தேயறிந்தமட்டும்

ஞாலமதிலுதிரும் நவமணியெலாம்பொருக்கி
மாலையாய்க்கோர்த்த வகையாகவிந்நூலைக்

காதலுடனியானுமொரு காதலெனப்பாடிவைத்தேன்
மாதவத்தோர்முத்தமிழின் வல்லோர்மனமகிழ

ஆக்கியோன்பெயர்.

மாவளஞ்சேர்செம்பி வளவாடன்மிக்கான
பூவைசியனென்னும் புகழ்படைத்தகங்கைகுலன்

மநுநீதிகாதல்.

ஆதிவையைசங்குமுக மாறைந்தானராம
நாதவேள்பாலன் களினகவிரஞ்சிதவான்

சீலமிகுமமூர்தச் செந்தமிழின்பாவினஞ்சொல்
மாலோனருட்சிறந்த மாபாரதப்ரசங்கன

கையுற்றநெல்லிக் கனிபோலறியவென்று
தெய்வச்சிலையானுரைத்த தெள்ளமிர்தமாமிதுவே

உற்றதொருகாவேரி யொன்றுப்பெருகிவரச்
சிற்றாறல்நீருமதிற் சோந்தங்கேயோடுதல்போல்

சந்திரனோடம்பரத்திற் றாரகைகள்வாழ்வதுபோல்
செந்தமிழோர்முனனே சிறியேனுரைத்ததமிழ்

புன்சொற்குதலையுங்கள் பிள்ளைமொழிபோல்மகிழ்ந்து
என்னசொலிதனைநித மின்பமெனக்கொண்டருள்வீர்.

நூற்பயன்.

சத்தியாசத்தியமுஞ் சாதிமுறைமார்க்கங்கள்
உற்றதொருதர்மங்க ளுதவியுதவாமை

தன்மனைவிமைந்தரொடு தகமையுடன்வாழ்வதுவும்
பின்மனைவிவேசையர்கள் பேதத்துள்ளாவதுவும்

மானமீனம்வாழ்வு மகிழ்ச்சியுடன்வஞ்சகங்கள்
தானுமுயாகீர்ததிப்ர தாபம்பரிமளித்தல்

துற்பிறவிதுற்சனர்கள் சோரமுடனுக்கினைகள்
நற்பிறவியாயுள்விர்த்தி நற்பதங்கள்நல்லறிவு

கற்பனைகளொப்பனைகள் கயவர்குணவிலக்கம்
எப்போதுந்தாளாண்மை யென்றாடவாமை. (உ௰)

காலத்தின்கற்பனைகள் கடவுளால்நிர்ணயங்கள்
ஞாலமதிலநன்றியுட னற்றவர்பத்திமுத்தி

ஸ்ரீதேவிமூதேவி சேரிடங்கள்தானுமநு
நீதிமுறைவறுமை நிச்சயமாய்சேரிடங்கள்

சோரவிடம்லோபி சின்னத்தின்பாங்குகளும்
பேரானமாதா பிதாவவர்வளாவதுவும

இருந்துமிறந்தோர்க ளிறந்துமிறவாதார்
மருந்துதவுமபண்டிதததின் மார்க்கமனத்தூக்கஞ்

சுத்தமசுத்தங்கள் தோகையரிலட்சணங்கள்
மெத்தப்பெரிதரிது மெலியதானங்கொடிது

மிஞ்சுங்கொடுமையினால் மின்னார்களாசையினால்
வஞ்சகத்தினாலிறந்தோர் மாறுதபேறுபெற்றோர்

இந்தகமையாவருட னின்னமின்னம்பலதாய்
சுத்தமுடன்முந்நூலோர் சொன்னபடியேயுரைத்தேன்

நன்னயஞ்சேரிந்நூலை ஞாலமெலாந்தானறியச்
சொன்னவொருபாட லொருகையுமோராயிரமாம்

பாடினேனிந்நூலைப் பயனறிந்தவுத்தமர்க்கு
ஈடிண்டோநல்லறிவுக் கின்னமொருநூலுளதோ

வேதியரொழுக்கம்.

ஆரணங்களோதுவதும் யாகாதிசெய்வதுவும்
மீறுகாயத்திரியால் வினையெல்லாந்தீர்ப்பதுவுங்

கல்லும்பிருதிமிக கானமரந்தாம்பூலம்
எலலாச்சுலையுமரு ளெய்துபடிமுடித்தால்

நன்னயமாய்மாரிபெய்து நாடுசெழிப்பதுவும
மன்னர்செங்கோலு மறையோர்மகிமையனறோ

அரசரொழுக்கம்.

தேசத்தியற்கை தெரிந்தமனுநீதி
வாசற்பிரதானி வாய்மைகுறிப்பறிதல்

தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தல்சத்தியமாம்
மன்னுங்குடிகளிலே. மாறுவபிமானம்

வங்கிஷத்திலுள்ளோர் மகிமைகுறையாமல்
தங்கள்குலத்தைத் தாராதரமாய்க்காப்பதுவும்

காலமிடமறிதல்மிக் கானதர்மசிந்தனைகள்
தாலமிசைகீர்த்திப்ர தாபம்பரிமளத்தில

தேவதாபத்தியுடன் சிட்டர்பரிபாலனமும்
மேலவராந்துட்டர்களை விரைந்தடக்குமாக்கினையும்

மாசனங்கள்மீதிலபி மானமதுபண்ணுங்கும்
ராசநீதத்தி னலமென் றுரைத்திடுமாம

வர்த்தகரொழுக்கம்.

தானறிந்தவாணிபமுந் தப்பாநிறைவசன
மானவரோதயத்துக் கதிகஞ்சிலவழியார்

கணக்கிலணுவும்விடார் காரியத்திலேசெலவும்
இணக்கமுடனசெய்வா ரிசைவார்க்கிசைவார்கள்

பொய்யுரையும்பேசார் போற்றிப்பொருள்சேர்ப்பார்
வையகத்தில்மிக்கான வணிகர்குலமார்க்கமிர்தம்

மறையோர்க்குமங்களமு மன்னவர்க்கும்வல்லபமுங்
குறையாதவர்த்தகர்கள் கொள்வினையும்விற்பனையும்

வேளாளரொழுக்கம்.

ஆகமவேதங்கள்தே வாலயம்விளங்குவதும்
மேகம்வருஷிப்பதும் வேந்தர்கள்செங்கோன்முறையும்

பாரிலேதர்மபரி பாலனங்கள்மேலுமுயர்
சூசவனுவுத் தொழிலாளர்சிலனமுந்

தாளாதகீர்த்தியுடன் றாரணியில்வாழ்வெல்லாம்
வேளாளர்தங்களது மேழிபெருமையன்றோ

தருமநீதி.

அறத்திற்பெரிதுமில்லை யதனையணுவளவும
மறப்பதுவேகேடன்றி மற்றுமுயர்கேடுளதோ

தர்மாதர்மமிரண்டுஞ் சதகோடிநாட்செயினும்
அம்மாத்திரமு மனுபவித்துத்தீருமன்றோ

எண்ணும்பலபொருளு மிகத்திற்கும்வாராது
புண்ணியபாவங்களிரண்டும் போவதில்லையுன்னைவிட்டு

பொன்னுடையாபரணப் பூதானமீந்தாலும்
அன்னதானத்துக் கதிகமுறுதானமுண்டோ

தன்னுற்சுயமாயோர் தர்மந்துடங்குவதில்
முன்னோர்செய்தர்மத்தை முக்கியஞ்செய்தலுத்தமுமாம். ௫௰

பாவபுண்ணியமிரண்டும் பல்லாக்கின்கீழ்மேலும்
போவதுவேசெய்த புண்ணியமுமபாவமுமாங்

கோணுதனுவளவுங் குறையாதவாழ்வதற்கு
ஆணிவேரென்பதுவு மறமென்றுசொல்லுவதாம்

உண்ணறிபவாழ்வு மெய்தும்பெருந்தவமாம்
புண்ணியமொன்றில்லாதேல புனல்நிறைந்தகாடாகும்

ஏதாகிலுந்தர்ம மெவருந்தான்செய்யவென்றால்
ஏதாகிலுமனதுக் கிசைந்தபடியேகொடுத்து

வாக்குசரீர மதனுற்சகாயங்கள்
ஏர்க்கவேசெய்வோர்க் கிகபரமவந்தெய்திடுமே

எத்தர்மமானதற்கு மிடையூறுசெய்தவர்கள்
புத்திரருமத்திபமாய்ப் போவார்நரகமதில்

மன்னருளநீத மதனிற்பதின்மூன்றும்
முன்னமேசொன்னமின்ன மூண்டுபதின்மூன்றுமைப்பார்

சேனைகுடியுஞ் சிநேகமுமந்திரியும்
ஆனபலவேளாண்மை யதனுடனேயிவ்வாறும்

மிச்சமறிவிகை மேலுந்தயிரியமும்
உச்சாகமென்ப துடனேயிவைநான்குந்

தூங்கான்மைகல்வி யுடனேயிம்மூன்றும்
நீங்காமல்வேணும் நிலமாளரசருக்கு

யானைகுதிரைபடை யானுடனேயாலயங்கள்
ஆனநல்லதர்மமதி னினைவுடனேயிமமூன்றும்

ஏழைக்கிரங்கி யெப்பிழைகளும்பொறுத்தல்
மீளவேதீர விசாரித்துத்தெண்டனையுந்

தக்கமரியாதை தயவுங்குடியினிலே
இக்குணங்களெல்லா மிருக்குமந்தராசாவை

ராசசிங்கமென்பரிவர் நாட்டினிற்பசிபிணியும்
மாசிலையாம்வருமை வாராதென்றேயுரைத்தார்

தான்செய்யுந்தர்மந் தனக்காகமுன்னோர்க
ளானபேர்தர்மத்தை யபகரித்துக்கொண்டாக்கால்

துன்னடக்கையென் றுமகா தோஷம்வந்துசூழுமென்று
நின்மலமாமென்று நிகழ்த்தினார்முந்நூலே ௪௰

ஆலரசுவேம்பிதுமூன் றுனதிலையொவ்வொன்று
மேலும்விளாநெல்லி வில்வமதில்மும்மூன்றும்

அன்பாகதெங்கு மாமைந்துமாபுளியில்
ஒன்பதுடனொன்றுமீ தொன்பதையும்வைத்தவர்க்குத்

தரணியிலேயெந்நாளுந் தக்கபுகழ்விளங்கும்
நரகமிவர்க்கில்லையென்று நவின்றார்மநுநூலில்

அன்னைதந்தைசுற்றங்க ளாதியிலேநம்பினவர்
முன்னுதவிசெய்தவர்கள் மிடிமையுற்றுவந்தவர்கள்

தக்கபெரியோரைச் சரணமென்றடைந்தவர்கள்
மிககவெளியோர்கள் மேனுளிற்சேவகரை

கைகழுவச்செய்யாமற் காப்பாற்றுமுத்தமர்க்கு
வையகத்தில்வாழ்வெய்தும் வம்மிசமும்விர்த்தியுண்டாம்

தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தவுத்தமர்க்கு
என்னென்னபாவம்போ மிகபரம்வந்தெய்திடுமே

மாமறையோரேமுதலாய் மற்றுமுள்ளோர்தங்களுக்கும்
சேமமுடனெண்ணெய் தேய்ப்பவர்கள்தங்களுக்கும

மநுநீதிகாதல்.

மறையோர்க்குத்தொண்டுசெய்துமாதாவைத்தெய்வமென்போர்
கறவைதனைக்கண்டவுடன் கையாற்சொரிபவர்க்கு

எண்ணூற்கோடி எக்கியங்கள்செய்தவெகு
புண்ணியம்வந்தெய்துமென்று புகன்றார்மநுநூலில்

துர்மார்க்கர்தங்குடியைச் சுத்தமாகக்கெடுத்து
நன்மார்க்கமுள்ளசில நற்குடியைக்காத்திடலாம்

அறக்குப்படித்தானாலு மவர்கடனைக்கெடுத்து
சிறப்புற்றபட்டணத்தைச் சீர்திருத்திகாத்திடலாம்

வீடானபட்டணத்தை மிகவுமங்கேகெடுத்து
நாடானதைக்காக்க லாகுமதிற்பாவமில்லை

என்றுமுன்னாள்மாயவனு மேயரவானைப்பலியாய்க்
கொன்றிடப்பாண்டவர்க்குக் கூடியதிவ்வாறாகும்

தீபமொன்றுலட்சந் திரிகொளுத்தினாலுமந்தக்
தீபங்குறையாத செய்கைபோலெந்நாளும்

தலமீதிலோயாத் தானதருமஞ்செய்தவர்க்கு
மலர்மாதாலுண்டாகும் வாழ்வதுவுங்குன்றாது

நன்மையேதர்மமதி லேவரும்காழ்வு
துன்மைவருவதில்லை தூயமனைகுணறாது

துன்மைதர்மத்தாற் றுலங்கும்பெறுவாழ்வு
நன்மைதராமாட்டாது நல்விர்த்தியாகாது

தர்மம்பொருள்கிடைத்த தற்காலஞ்செய்பவென்று
வறுமைவந்தால்தர்ம மதுசெய்யக்கூடாதே

காய்பழங்கள்பூவிலைகள் கதித்தமரங்களிலே
வாய்வுசென்றால்நற்கனிகள் மட்டுமுதிராமல்

தக்கபழங்காய்பூ தளிர்முதலாயுதிரும்
பக்குவம்போற்கெற்பமுதற் பயந்தமனுக்களிலே

சாலக்கிழவர்மட்டுஞ் சாவதன்றிமற்றெவரும்
ஞாலமிசைச்சார்வதில்லை யாக்குமென்றெண்ணவொண்ணா

என்னவயதானாலு மியல்புவரும்வேளை
நன்னயஞ்சோதர்மஞ்செய் தாலிதுவேயுத்தமமாம்

பண்டுசெய்தபுண்ணியமும் பாவமொன்றுஞ்சொல்லும்விதம்
ரண்டுமனுபவிப்பா ரெக்காலமானாலும் ௯௰

நமக்குள்ளதைச்சமைத்து நாமுண்டுவந்தபிறர்
தமக்குங்கொடுக்கின்ற தர்மமேமுக்கியமாம்

வாசற்கதவடைத்து வைத்துண்பார்க்குச்சொர்க்க
வாசற்கதவு மாறுதடைத்திருக்கும்

உப்பிலாக்கூழு முளமகிழ்ந்து தான்கொடுத்தால்
ஒப்பிலாப்பாலமிர்த மொக்குமென்றார்முன்னோர்கள்

பகைவன்கொடுங்கோபி பாலமிர்தமீந்தாலும்
மிகவானநஞ்சுநஞ்சுக் கெட்டிக்காய்கொப்பிடலாம்

ஓட்டைக்குடத்திலிட்ட வுதகம்போனாற்போல
நாட்டமெவர்வாழ்வு நாளுக்குநாள்குறையும்

கூடிவருங்காலங் குறிப்பறிந்துதம்மாலே
கூடுமட்டுந்தர்மங் கொடுத்தாரேயாமாகில்

வானுளேபோகும் வழியடைக்குங்கல்லென்று
கோணுதவாய்மை குறளிலேசொன்னாரே

ஆறிலொருகடமை யரசர்க்காமைந்துபங்கு
சேரும்விருந்துசுற்ற தெய்வம்விதிர்தமக்காம்

இல்லறத்தில்வாழ்ந்தாலிவ்வாறுசெய்யவென்று
வல்லமைசேர்வேதமுறை வள்ளுவருஞ்சொன்னாரே

பாவத்தாற்பொன்றேடிப் பலதர்மஞ்செய்தாலு
மேவுற்றபுண்ணியங்க ளெள்ளளவும்வாராதே

தர்மத்தாற்றேடித் தராதரமுங்கண்டறிந்து
தன்மையுடன்வந்தோர் தமக்குவிருந்தளித்து

இன்னம்வருவிருந்துக் கெதிர்பார்த்திருக்கின்ற
நன்னயவானவீடந்த லட்சுமியின்வீடாகும்

பூமியிலேவித்தேறும் போட்டதேயுண்டானால்
தாமேதானைஸ்வரியந் தன்னாலேகூடிவரும்

ஏற்போர்களாறேனு மெவ்வேளைவந்தாலும்
கூர்ப்பாகத்தம்மாலே கூடுமட்டுமீந்தாக்கால்

இருந்தாலிறந்தாலு மெந்நாளுங்கீர்த்தியுண்டாம்
பிறந்தாலுமேலாம் புகழுதிகவாழ்வுண்டாம்

தர்மங்களாவதுதான் தர்மவான்செய்வதல்லால்
கர்மிகளுக்கெய்தாதேக் காலமுந்தான்செய்யானும்

எத்தர்மமானாலு மீகைக்கிணையில்லை
மற்றெல்லாம்பின்னென்று மனுநீதியிலுரைத்தார்

மாரிச்சிறப்பு.

மண்ணிலுறுதவங்கள் மாதானமற்றுளதும்
விண்ணின்றுபோனால் விழலாகும்வாரிமுதல்

வாரிவளமு மாநிலத்திற்புற்பூடுஞ்
சீர்பெருந்தானதவந் தேவாலயச்சிறப்பும்
மன்னர்முதலானவர்கள் வாழ்வுமவர்தாழ்வும்
மன்னுமுயர்வானமதில் மாரிவளமாமன்றே

இல்லறம்.

வெல்லறங்கள்செய்துகன வேள்விமுடித்தாலும்
இல்லறத்தின்வாழ்வுக் கிணையாவதொன்றுமில்லை
மூர்த்தியென்றமூவருக்கும் முன்னாளிறந்தவர்க்கும்
பார்த்திபற்குந் துறந்தார் பலமுயர்ச்சியாளருக்கும்
இயல்பினாலிவ்வா றிவர்க்குத் துணையெனவும்
நயமாகுமென்றுகுற ளானதிலேசொல்லினரே
மட்டில்லாவாழ்விருக்கென் மனைதனக்குமுக்கியமாம்
இட்டமுறுபெண்சாதி யென்பவளேமுக்கியமாம்
சற்குணமுந்தெய்வபக்தி தர்மசிந்தைகற்புடைமை
இக்குணங்களுள்ளா ரிருக்குமந்தவீட்டினிலே
வற்றாதுசெல்வமவள் வாயால்மாரிபெய்யென்று
உத்தரஞ்சொன்னா லுலகமெலாமாரிபெய்யும்
தானுமனையாளுமொரு தர்மமதுசெய்யவன்று
தானவர்கள்வேறுபட்ட தர்மமதுதர்மமல்ல

செல்வநிலையாமை.

நினைத்தபொருணீங்கி நினையாப்பொருளொன்று
மனைத்துமதுதானே யப்படியும்வந்துவிடும்
நிலையாகத்தோற்றுகின்ற நிலவனாவும்போயிருளாம்
கனஞ்சேரிருணிலவாய்க் காட்டுதற்கப்பாலும்
இரவும்பகலாகும் பகலுமிரவாகும்
பெரிதானமேடங்கே பேராறாயாகிவிடும்
ஆறதுவுமேடாகு மணல்நிலத்திலோடம்வரும்
வாரிசுவறியதில் மணலுமிகச்சூடாகும்
வேண்டுநிதியோ ரெளியோருமாவார்கள்
மீண்டுமெளியோரு மேலோருமாவார்கள்
தகைமைசெறிவாழ்வுந் தாழ்வுஞ்சதமல்ல
சகடுபோற்சுற்றிவருந் தாழ்வதுவும்வாழ்வதுவும்

தெய்வச்செயல்.

பேராசையாலே பிரயாசைபட்டாலும்
வாராதுவாராது வருவதுவும்போகாது

எங்கெங்கேபோனாலு மியாவரிடஞ்சென்றாலும்
பங்கமுறைத்துப் பலனைமிகநொந்தாலும்

அழுதுதொழுதாலு மனேகநாட்டெய்வத்தைப்
பழுதாயுரைத்தாலும பயனொன்றுமெய்தாதே

ஆழக்கடலி லமுக்குமுகந்தாலும்
நாழிவரும்நாழியிலே நானாழிநீர்வருமோ

பூர்க்குமரஞ்செடிகள் பூவாநாட்பூவாது
ஆர்க்கும்விதியையன்றி யாசையினல்வாராதே

ஆலிற்புறாவிரண் டங்கிருக்கவோர்வேடன்
சீலமுடனெய்வதற்குச் சிலையிற்கணைதொடுக்க

பாயவந்தராஜாளிப் பட்சியதுமேலுலவத்
தூயபுறாவின்மேற்றொடுத்தகணைவிலகி

ராசாளிப்பட்சியுட லானதிலேதைத்துவிழ
பாசமுறுவேடன் பதத்தில்விஷந்தீண்ட

வேடனும்ராஜாளியுமாய் வீழ்ந்துவிடவேயொரு
கோடாய்ப்புறாவிரண்டுந் துன்பமற்றுவாழ்ந்ததுவே

இத்தகைமையாய்முடியு மீசன்செயலாலதற்கு
அத்தாட்சியாமென் றருளினார்முன்னூலோர்

அண்டாமுதுண்ண வரனுமேநஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணன்காடுறைந்து கோதைதனைப்பிரிந்தான்

வேதன்சிரமிழந்து மிப்பார்சிறையிருந்தான்
ஆதியிலேயிந்திரனு மங்கமெலாங்கண்ணானான்

சக்கிரேசனவரிச் சந்திரனும்பெண்டிரும்
மிக்கவொருநாடிழந்து விலைப்பட்டுத்துன்பமுற்றார்

மன்னுநளராசன் மனைவிதனைப்பிரிந்து
தன்னுடையநாடிழந்து தன்வடிவுங்குன்றினனே

ஐவரடவியுற்றா ராகையாலாரேனும்
வெய்யோன்விதிதனையே வெல்லவெவரால்முடியும்

பூபாரந்தீர்த்த புயல்வண்ணன்வேடன்கை
ஆபாணம்பட்டிறன்று வாதைக்குள்ளாகினனும்

ஆனைபறவையுட னுடரவமிம்மூன்றும்
சேனைமனிதர்கையிற் சிக்கிமெலிதுவுங்காய்

நல்லகதிர்மதிகள் ராகுகேதாற்றுயருறலும்
வல்லதர்மவானுக்கு வறுமைவந்துசூழுவதும்

பாக்கியமுள்ளானுக்கோர் பாலகனில்லாததுவும்
போக்கற்றவேளைழக்குப் புத்திருண்டாவதுவும்

நல்லோர்க்குப்பொல்லாத லண்டப்பெண்டாவதுவும்
பொல்லார்கருநல்லகுணப் பெண்மனைவியாவதுவும்

ஒரொன்பதொன்பதிது ஆழிவிதிப்பயனும்
வீரர்க்குமேலவர்க்கு மினபதுன்பஞ்சமனும்

ஆகாச்செயலுக்கு மயலார்பொருள்தனக்கும்
வாகாகவாசைமிக வைத்தால்வருவதில்லை

வாழ்வதுவுந்தாழ்வதுவு மன்றுவருநின்றுவரும்
ஊழ்வினையின்வாறன்றி யுத்திபுத்தியாலாமோ

ஏலவேவந்திதுபோ மின்பதுன்பமதுபோல்
ஞாலமிசைப்பின்னு மிவைரணுமனுபவிப்பார்

காலித்திரளிலொரு கன்றினைதைவிடுத்தால்
பாலித்தேயீன்ற பசுவறிந்துசேருதல்போல்

ஓடியொளித்தாலுமங் குற்றபழவினை தான்
தேடிப்பிடிக்குமென்று செப்பினார்முன்னோர்கள்

எக்காலஞ்சென்றாலு மிறவாதபேரில்லை
மிக்கவிதிவசத்தை வெல்பவர்களாருமில்லை

சுகபோசனம்.

தாளாண்மையென்னுந் தகைமைதனைச்சீர்தூக்கில்
வேளாண்மைக்கேபதிக மில்லையென்றுசொலலினரே

வேந்தர்தமையடுத்தோர் வேளாண்மைசெய்பவர்கள்
சார்ந்தவனமலைகள் தன்னருகில்சஞ்சரிப்போர்

மருவாருஞ்சந்தன மாம்வனத்திற்சமுத்திரத்தி
னருகேயிருப்பவர்க ளாவின்பாலுள்ளவர்கள்

சகடுடையாக்கினா தன்னைபயிரிடுவோர்
மிகவுமிந்தவெண்மருக்கு மேலானபஞ்சமில்லை

நற்சகோதரர் துற்சகோதரர்.

தம்பியர்மேலன்புடையோன் தர்மகுமாரர்
தம்பிமேல்சத்ராதி தசக்ரீவன்வாலியுமாம்

நற்றுணையாந்தம்பியர்கள் லட்சுமணன்பரதன்
உற்றதொருதர்ம ருடன்பிறந்தநால்வர்களாம்

சுக்ரீபனுனவனுஞ்சுயோதனன்விபீஷணனும்
தக்கபுகழ்பூவுலகில் தனையனுக்குச்சத்ராதி
பண்பாயுடன்பிறப்பிற் பகையுறவிதாகுமென்று
முன்பாகநீதிநூல் முறையிலுரைத்தனரே

அரசிற் புகழ்பெற்றோர்

மனுவிட்சுவாகுவுடன் வாகரன அம்பரீஷன்
கணைதபெறுமாந்தாதாகார்த்திகார்ச்சுனன்பரதன்

விருத்தச்சிபியுடனே விந்துச்சிவிந்துவுடன்
மருத்தப்பகிரதனும் வாணனைமுசுகுந்தனுடன்

திராப்புகழ்யாதி தேவேந்திரனுடனே
பாசிற்றசரதனும் பாண்டவர்களவர்களும்

சத்யவரிச்சந்த்ரனுட தாதைதிரிச்சங்கு
உற்றநளனவிதுர னேகோபுரூரவனும்

அந்நாளிலேபிரக லாதனுடன்மாபெலியு
மன்னுஞ்சடாயுகுகன் வாகாம்விபீஷணனும்

ஆனறந்துபெரு மதிகபூசாபலராய்ப்
பாரிற்புகழ்முத்திப் பரமபதமுற்றவராம்

ஏற்கைபெருந்திரளி லெழிலவிஸ்வாமித்திரமுனி
மார்க்கமுடன்மாணிக்க வாசகருமாபெலியும்

வின்னமில்லாவள்ளுவருமவேடனுங்கண்ணப்பன்
தன்னுலெழுவர்களுந் தானவராய்ப்பேறுபெற்றார்

நல்லறிவு.

தீயினாற்சுட்டபுண் தீருஞ்சிலமருந்தில்
வாயினாற்சுட்ட வடுவொன்றுமாறாதே

ஏற்கையுடன்புகழோ டெய்தாதசென்மமவன்
தீர்க்கமுடனேமறு ஜெனமமெடுக்காமைநன்றும்

மண்ணிற்பிறப்பதெல்லா மாதிலதுமேலகாட்டுந்
தண்ணமுளவாய்ச்சொலலாற் சாதியறிந்திடலாம்

சிறியோரிணக்கம்விட்டுத் தீங்கொன்றுஞ்செய்யாது
பெரியோர்தமையடுத்தாற் பேதமொன்றும்வாராதே

துய்யகிரகம்நித்திய சோபனத்தினால்விளங்கும்
வையகத்துராசாக்கள் மனுநீதியார்கெலிப்பார்

காரியர்கள்சற்குணத்தி னாலேவிளங்குவர்கள்
கூறும்விதரணனுங் கொடையால்விளங்குவனும்

பாரிலெந்நாளும் பகல்விளங்குமாவிரவிற்
காரிருளையும்விளங்குங் காந்தியுமாபதியாம்

பதிவிளங்கும்பொன்னாலே பார்விளங்குமேகமதால்
சதுராய்ப்பகைவிளங்குந் தங்கள்புயவலியால்

குடியேவிளங்குவது கொற்றவர்களால்நீதி
நெடியதலம்விளங்கு நெஞ்சிலுற்றநல்லறிவால்

புகழாற்கொடைவிளங்கும் போசனத்தாலுயிர்வழங்கும்
புகழரியநன்னூலாற் புத்திமிகவேவிளங்கும்

சொந்தமென்றுதுற்சனரைத் தோழமைகள்செய்யவொண்ணாச்
சந்தேகமுற்றவொரு தையலரைச்சேரவொண்ணா

சார்பில்லாக்கிளையில்லை தயவிலாற்கறமுமில்லை
ஊரில்லாக்காசுமில்லை ஊணில்லார்க்குறுதியில்லை

மாடில்லாதார்க்கிந்த வையகத்தில்வாழ்வுமில்லை
கூடிமுதலில்லார்க்குக் கொள்ளல்விற்றலிலாபமில்லை

துற்சனற்குநேசமில்லை சுகமில்லார்க்காசையில்லை
இச்சகத்தினன்மைதனக் கெப்போதழிவுமில்லை

மனதின்குறிப்பை வதனத்தாலறிந்திடலாம்
ஆனவோர்குணநடத்தை யதனாலறிந்திடலாம்

சமர்முகத்திற்சூரன்வலு தன்னையறிந்திடலாம்
தமர்சேரும்வலபிணியைத் தாதாலறிந்திடலாம்

கல்விப்பிரசங்கத்திற் காணலாங்கவிஞர்திறம்
சொல்வண்மையாற்சாதி தோற்றமறிந்திடலாம்

மானிலத்திற்பூண்டுகளை மழையாலறிந்திடலாம்
தானுநல்லார்பொல்லாரைச் சந்ததியாற்கண்டிடலாம்

கண்ணிரண்டாம்யாவருக்குங் கற்றோர்க்குமூன்றுகண்ணாம்
என்னுந்தியாகிகளுக் கேழுகண்ணாகுமல்லோ

மனக்குவிந்துஞான மகிமையறிந்தவர்க்கு
அனேகங்கண்ணாகுமென் றருளினார்முன்னோர்கள்

தர்மவான்றன்னிடத்திற் றங்காதுபாவமுந்தான்
கர்மிதுன்மார்க்கரிடங் கனத்ததர்மமில்லாது

நெருப்புக்குமுன்குளிரு நில்லாதுதான்மிகுந்த
கருத்தவிருள்மணியுங் கதிரோன்முனில்லாது

சத்தியத்தைநாளு மசத்தியமும்வெல்லாது
புத்திகெட்டகோபம் பொறுமைதனைவெல்லாது

புண்ணியத்தைப்பாவமொரு போதுமேவெல்லாது
மண்ணில்விஷங்கெரு — மந்திரமுன்னில்லாது

சந்தனங்கஸ்தூரி தாம்பூலமாடைமுதல்
விந்தைசேரியாபரண மிவற்றைப்பெறீந்தாலும்

ஏற்போரொருகையா லேற்றாரேயாமாகில்
கூர்ப்பாய்க்கொடுப்பவர்க்குக் குறையாயுவாயிசுண்டாம்

செகமுழுமையுந்தானே தேவாதீனமாகும்
மகவானதெய்வமது மந்திராதீனமதாம்

மந்திரமாமதுவே மாமறையோராதீனம்
சந்ததஞ்சேர்மாறையோர் சகலருக்குந்தெய்வமென்பார்

பாலன்னமானாலும் பண்பில்லாக்கூழெனினும்
மேல்சுத்தமாய்ககால மிகவறிந்துண்ணனன்று

கல்லோர்க்குற்றதுயர் நன்மைசற்றுமில்லாத
பொல்லாதான்வாழ்வுமொரு போதுநிற்கமாட்டாதே

பாம்புகடிநெருப்பிற் பழகிப்பிழைப்போர்கள்
மேன்பாடுக்கொப்பாகு மென்றார்மனுநூலோர்

ஊமைக்குத்தோன்ற உபாயங்கள்சொல்லுவதும்
காமிக்குஞானக் கதையெடுத்துச்சாற்றுவதும்

துட்டனுக்கெத்தனையோ சொல்லிநன்மைசெய்ததுவும்
முட்டாளுக்குற்றநிச முள்ளதைச்சொல்லுவதும்

இன்பக்கவிகடனை யியாற்மேற்பாடுவதும்
அன்பில்லாசோரஸ்திரீ யாசையால்மெலிவதுவும்

நலத்தைக்கொடுப்பதில்லை நன்றாகாதிவ்வாறும்
மலைக்கல்லிலேயெறிந்த மண்பாண்டமாகுமல்லோ

ஐந்தானபாவத்தி லானாலிரண்டுநலம்
ஐந்திலேமூன்றை யவ்வைசொன்னாளாகாதாம்

தெய்வத்தாலாகா தெனினுமுயர்ச்சியிலே
மெய்வருந்தக்கூலிதரு மென்றனரேமுன்னூலோர்

இத்தனைநாள்நம்வீட்டி லேற்றும்விளக்கென்றணுகி
முத்தமிட்டார்கன்ன முடையெழும்பச்சுட்டுவிடும்

உற்றகுலத்தெய்வநமக் கொன்றுசெய்யாதென்றுபொய்யாச்
சத்தியமும்பண்ணினாற் றான்விடவுமாட்டாது

தூங்குவதுபோலுந் தூங்கிவிழிக்கின்ற
பாங்கதுவுமாமிந்தப் பாரிற்பிறப்பிறப்பு

கூட்டினுள்ளேயிருந்து குருவிபறப்பதுபோல்
கேட்டமுடம்பினிலே சீவனிருந்ததுசெயல்

கொல்லாமை.

கொலையென்றுமெஞ்சிற் குறியாதான்வாணாள்மேல்
மலைவாயுயிருண்ணு மறலிவரமாட்டானே
நல்லோர்பெரியோர்க்கு நாயகமேயாவரெனில்
கொல்லாமையென்பதனைக் குறித்தறிந்தவுத்தமராம்
தானுதிபதிதூதன் தந்தைதாய்சற்குருவு
மானார்மனையாட்டி மறையோர்புராணிகளை
சுத்தமுள்ளவீரர் துலங்குகவிவாணர்
உற்றதபோதனர்க ளுயர்குலத்தோர்பாலகர்கள்
சாலவிகடப்பிர சங்கிபிணியாளர்
ஞாலமிசைவறுமை யாளர்பதினெண்மரையும்
எப்பிழைகள்செய்தாலு மிராசர்முதலானவர்கள்
சர்ப்பனையுந்தண்டனையுந் தான்செய்யலாகாதே

கொடுநரகடைவோர்.

நீதியுள்ளராசர்களை நீதிவழக்குரைப்போரை
ஆதிகுருவானவரையவருடையசீஷரையும
சோதிடஞ்சொல்வேதியரைத் துன்பங்கள்தீர்த்தவரை
யோகரியபண்டிதரிவ் வோரெழுவர்தங்களையும்
தீதானவஞ்சகங்கள் செய்தாரேயாமாகில்
தீதாய்கொடுநரகிற் சேர்வார்கள்திண்ணமிதே

அன்னமளித்தவருக் கவகேடுசெய்தவர்கள்
மன்னர்தமையடக்கி வைத்தவமைச்சர்களும்

நன்றிமறந்தவரும ராசாக்களைச்சமரில்
ஒண்டியாய்விட்டே யொளித்தோடிப்போனவரும்

மாதாபிதாகுருவை வசையாய்நிந்தித்தவரும்
வேதாந்திமாதவத்தோர் மெய்நோகவைதவரும்

தெய்வமிகழ்ந்தவரும் சின்னமுதலாகப்
பொய்சொல்வோரன்னியர்தம் பொருட்காசைப்பட்டவரும்

பாரில்விசுவாசப் பாதகமேசெய்தவரும்
நேருண்டவீட்டுக் கிரண்டகங்கள்செய்தவரும்

பன்னிருவர்தானும் பரிதிமதியுள்ளளவும்
நன்னயமில்லாத நரகிற்குடியிருப்பார்

சோதிடங்கள்சொல்வோருந் தொழிலவழக்குத்தீர்ப்போரும்
பேதமில்லாபண்டிதரும் பிராயச்சித்தம்விதிப்போர்

நீதியுரையாம லிரண்டகமாய்ச்சொல்வாரேல்
ஆதீனமும்பாழாம் பாழ்நரகமெய்திடுவார்

பார்க்குமலைகடலின் பாரமதுபாரமல்ல
பார்க்குவிசுவாசப் *பாதகனுமென்பவனும்

கற்றதுரோகியுடன் காணுமிவரிருவ
ருற்றசுமையேயென் றுலகமாதஞ்சுவளாம்

அக்கினியிலேயுமிழ்ந்தோ ராறுபேராமிவர்க்கு
மிக்கவொருகொடிய வியாதிவரும்பின்நரகம்

தண்ணீரிறம்மணமாய்த் தான்போவோரிற்புணர்ந்தோர்
உண்ணீரிலேயுமிழ்ந்தோ ருறுமலமும்நீர்விடுத்தோர்

அசுத்தமுடனேதா னாலயத்திற்செல்வோர்கள்
நிசமாகச்சந்நிதியி னேராய்க்குடியிருப்போர

போற்றுகின்றதேவதையின் பூசைக்கெனக்கொணர்ந்து
சாற்றுதபுட்பந் தனையெடுத்துச் சூடினவர்

தீராப்பிணியிடைந்து செகத்திலிம்மூவர்களும்
மாறுவறுமையுமாய் வன்னரக்கஞ்சேர்வார்கள்

மேற்குலத்துகீழ்குலத்து மின்னாருடன்பிறந்தோர்
ஆகுலமுண்டாகி யழிவர்குலவிர்த்தியற்று

கண்காதுக்கெய்தாத கடுஞ்சொல்லைசொன்னவர்கள்
மண்மேல்குலத்தோடு வனைரகஞ்சேர்வார்கள்

கெடுமதியாலெடுத்தார்க்குக் கேடுநினைத்தவர்கள்
குடும்பமுமோசமாய்க் கொடுநரகஞ்சேர்வார்கள்

மன்னர்நிருப மதுதனையேதள்ளியிட்டோர்
அன்னைதந்தைசுற்றத் தவர்கள்தனையடிப்போர்

எளியர்தனையடைந்தோர் கிகல்புரியும்வஞ்சகர்கள்
பழியாளக்கோளர் பழிபுனையரெண்மரையும்

மண்டலத்தில்மூன்றுபிழை மட்டும்பொருத்தப்பாற்
தெண்டனைகள்செய்வதுவே தேசமன்னர்நீதியதாம்

உரியவிவகாரம்வந்தா லுற்றார்பகைஞரென்னும்
பரிதானையெய்நாசம் பந்தரிவரேழையென்றும்

பாராமல்நீதியாய்ப் பார்த்து விசாரித்து
[illegible]

நிறையாரிரைத்தவர்க்கு நீடூழிகாலமவரை
குறையாமல்வாழ்வுமவர் குலமுமிகவிர்த்தியுண்டாம் ௨௪௯

துஷ்டசங்கிரகம்.

சாதிமுறைதவறுஞ் சண்டாளர்கற்புடைய
மாதைவிரும்புவிசுவாசமில்லாபாதகர்கள்

கோள்கள்மிகுத்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
நாளும்பகையாளர் நாசனைத்துரோகிகளை

ஏழைதனையடித்தோரிகல்விளையுஞ்சண்டைகளைச்
சூழும்பிணிகளொடு துஷ்டமிருகந்தீய

கொண்டமைதீராத கோபம்பதினறு
மன்றடக்குவதல்லா லதிகரித்தாலவெல்லரிதே

துற்சனரும்பொன்னுந் தூரகதமுந்தோற்கருவி
மிச்சமுறுநரம்பின் வெங்கலமாமுககருவி

மானமில்லாமூளிக்கு மானுரவர்களையும்
ஈனமில்லாக்கரும்பு எள்ளுடனேயிரைந்தும்

தெண்டித்தார்க்கெல்லாஞ் செயங்கொடுக்குமின்றிவற்றை
பண்டுவடநூலிற் பகர்ந்தாரேமுன்னோர்கள்

தந்தைதாயானாலும் தன்குலமெல்லாம்விளங்கும்
மைந்தனேயானாலு மனையாட்டியானாலும்

மந்திரியேயானாலு மாபுள்ளோரானாலும்
பந்தமுடனமக்குப் பகையாளியெனவறிந்தால்

அன்றேயகத்திடினு மாக்கினைகள்செய்திடினும்
கொன்றாலும்பாவங் கொலையுமில்லையெனறனரே ௨௫௫

தோழமையில்வஞ்சகரை சொற்கேளாமைந்தர்களை
மீளாச்சமர்முகத்தில் விட்டோடுஞ்சேவகரை

தன்னகர்க்குவஞ்சஞ்செய் மந்திரியோடிவ்வறுவர்
மன்னைகொடுந்தண்டனையுஞ் சதியுமிகச்செய்திடலாம்

நல்லறிவு.

பூமிக்கரசர்தெய்வம் புருஷனேபெண்கள்தெய்வங்
காமிக்குமாதர்தெய்வங் காசுபணம்லோபிதெய்வம்

தாரித்திரனுக்கு தனங்கொடுப்பார்தெய்வமிந்தத்
தாரணியில்துட்டருக்குச் சவுக்கடியேதெய்வமென்பார்

நீதியுடையோனுக்கு நேயமேதெய்வமதாம்
ஆதிபராபரமே [illegible]வோர்க்குந்தெய்வமதாம்

அன்னைதந்தைசுற்றத்தை யடர்ந்துமுனியவொண்ணா
பின்னொன்றுமின்னொன்று பேசித்திரியவொண்ணா

வஞ்சகனாநம்பவொண்ணா வாக்கிரண்டுபேசவொண்ணா
தஞ்சிப்பொறுமையிலாச் சண்டையினிற்போகவொண்ணா

வேணவித்தைகற்றாலு மேதினியிலேவிளங்க
ஆணவமாய்க்கொஞ்ச மாடம்பரமேவேணும்

நீடுநதிகண்மிக நீந்தியறிந்தாலும்
ஓடந்தனையகற்றி யுதகத்திற்சொல்லவொண்ணா

ஞானமறிந்தாலு நாடொப்பனைகளதா
வானதுபோலேநடந்து மகிமைபெறவேவேணுந்

செம்பொற்குபேரனெனிலுஞ் சீவனத்திலேமுயற்சி
பண்புடனேநாளும் பண்ணியிருக்கவொண்ணா

வாசமுடனேவெகுவாய் வல்லமையுண்டாயினும்
ராசாக்கள்சேர்வை நலம்பெறவேணுமெல்லோ

உரித்தானபுத்திமதி யூகியேயானாலும்
பெரியோர்கள்சொற்கேட்டுப் பின்சென்றிருக்கின்று

பெற்றபிள்ளைநான்மூடப பிள்ளையேயானாலும்
சற்றாகிலுங்கல்வி தான்வரவுசெய்யநன்றாம

மெலிவாகியேயதிஷ்ட மில்லாதிருந்தாலும்
சலியாமலேமுயற்சி தன்னைவிடவொண்ணாதே

தீராதரோகமதால் தேகமெலிவுற்றாலும்
வீராயவிழ்தத்தை விட்டுவிடலாகாதே

தனிமைபொருள்தேடித் தணிந்துண்ணும்பாற்சோற்றி
லனையார்கிளையோடே யன்றுண்டகூழதிகம்

ஏதோர்மருந்து மில்லாவிடத்தினிலே
பேதைகளாச்சேவித்து பெறும்பொருள்கள்வாங்குவதில்

மானமரியாதையுடன் வையகத்தில்நல்லோராய்த்
தானுள்ளபேர்கொடுக்குந் தாம்பூலமேயதிகம்

வீணிற்பலவித்தை மெத்தவிரும்புதலி
லாணியாம்வித்தைக ளறக்கற்றலொன்றுநலம்

சின்னமுயல்மான்கள் சிற்சிலதைவெல்லுவதி
லுன்னும்புலிக்குட்டி யொன்றைவென்றார்கீர்த்தியுண்டாம்

அவிவேகியுடன்வெகுவா யானவுறவதிலும்
விவேகிபகையிருந்தால் மெத்தவதுநன்றாகும்

தன்னுயிற்குவந்தலயந் தப்புவிக்கவேண்டுதற்கும்
பின்னும்பிறருயிரைப் பேணிவிடவேண்டுதற்கும்

மையல்கொண்டமாதருக்கும் வைவ கத்திலஞ்சாமற்
பொய்யுரைத்தபாவமொருபோதுமில்லையென்றனரே

பின்னால்வெகுபொருளைப் பேருயளிப்பதிலும்
முன்னால்தருணத்தில் வீய்ந்தவனைக்காசுநன்றும்

நாளையென்றும்பின்னையென்றும் நாட்கெடுவுசொல்லுவதில்
வேலையிதுவல்லபோ வெள்ளால்மிகவுநன்று

தெளிவானகல்விகற்றால் தேசம்வசியமதாம்
பழியாமரியாதை பாவலர்கள்தன்வசியம் ௨௮௰

சித்தமதிற்பத்தியே தெய்வவசியமதாம்
இற்றப்பெருஞ்செல்வ முறமேவார்தலைவசியும்

வேண்டும்பொருள்கொடுப்போர் வேசையர்கள்தெய்வமதா
மாண்டுகெட்டிக்காத்திருந்தா லரசர்வசியமுண்டாம்

சாந்தமொழுக்கஞ் சகலஜெனவசியம்
வார்த்தகமுநல்ல மலையாளுக்கேவசியம்

கூடியேவாழ்ந்தாலும் குழந்தைமிகப்பெற்றாலும்
தேடிப்பிதிர்களுக்குந் தெய்வத்துக்கிட்டாலும்

தானதர்மஞ்செய்தாலுந் தாழ்ந்தவர்க்குசொன்னாலும்
மானமுளநல்லோர்க்கு வணங்கிடந்தாலும்

செய்தபிழைபொறுத்துத் தேசமதில்வாழ்பவற்கு
ஐயமில்லைவாழ்வதிக மப்பாலுங்கற்பமதாம்

செய்தபிழைபொருத்துத் தேசமதில்வாழ்பவற்கு
துய்யவயித்தியங்கள் சோதிடங்கள்தங்களிடப்

மருங்காயெவையுமங்கே வைத்துவணக்கநன்றாம்
வெறுங்கையாற்போனால் விழலாக்கருமமெல்லாம்

பாரிலொருதாயார் பலபிள்ளைபெற்றாலும்
சீருமழகுந் திறங்குணமும்வெவ்வேறாம்

பயிரிடுவோர்தங்களுக்குப் பாரில்வறுமையில்லை
தயிரியமுள்ளவர்க்குத் தாமோர்பயமுமில்லை ௨௯௰

உற்றசெபஞ்செய்வோர்க் கொருநாளும்பாவமில்லை
நித்திரையில்லாதார்க்கு நேரும்பயமுமில்லை

தன்னவனுயிருந்து தப்பிதங்கள்செய்தாக்கால்
அன்னியனுமென்றெண்ணி யன்றேயகற்றநலம்

அன்னியனுயிருந் தன்புள்ளோனுனக்கால்
தன்னவனுமென்றவனைத் தாபரித்துக்கொள்ளலாம்

நல்லோர்க்குமுன்னுளோர் நன்மைசெய்தாலதற்குப்
பொல்லாவொருநூறு பிழையும்பொருப்பார்கள்

அற்பர்க்கெழுநூறநிகநன்மைசெய்தாலும்
சொற்பவொருபிழைதான் செய்தாற்பொறுககாராம்

செய்ததவத்தளவே செல்வமதுவுண்டாகும்
எய்துங்குலத்தளவே யிருக்குமவர்கள்குணம்

கற்றோர்நலஞ்சிறந்த கன்னியர்களன்புடையோர்
நற்றவக்களுற்றவர்க்கும் ராசாக்களானவர்க்கும

சாதிவரம்பெண்ணு தனுசரிக்கவேண்டுமதே
நீதிமுறையென்றுமநு நீதிநூலோதிடுமாம்

இன்பக்கவிமூட ரிடத்திற்படித்தாக்கால்
நண்பில்லைசற்று மதற்கும்பழுதுசொல்வார்

கற்றோரருமைதனைக் கற்றோரறிவதல்லாற்
சுத்தமலடிபிரசூதிதுயரறிவாளோ ஙா

பஞ்சரித்துவேண பரிசுபெறுவதிலு
மின்சொல்லாற்பிச்சை யெடுத்துண்ணனன்றாகும்

வீம்பானசத்ராதி மெய்யன்றிருப்பதிலும்
பாம்போடுறவுமிகப் பண்ணுவதேநன்றெனலாம்

கண்ணென்றுரைப்பதிரு கண்ணதுவுங்கண்ணுமல்ல
எண்ணெப்படுதேனை யெழுத்தெண்பதுவேகண்

கைப்பொருளேபொய்ப்பொருளாங் காலவரையில்லாது
மெய்ப்பொருளாந்தான்கற்ற வித்தைநீங்காப்பொருளாம்

வாழ்வுமிகவந்திடினும் வம்மிசத்தின்மார்க்கம்போல்
தாழ்ந்துநடப்பவர்க்குத் தாழ்வுசற்றும்வாராதே

யானைதனதென் றடாதுசெய்யப்போகாது
தீனுதைமிகுந்து தின்றாலுங்கேடெய்தும்

ராசநூரியரென்று நடத்தைபொறுமைசெய்தால
ஆசாரமேன்மையும்போ யவதியும்வந்தெய்திடுமே

இல்லாரையுள்ளவர்களேசியிழுக்குரைத்தால்
நலலதல்லநஷ்டநயம் ராட்டினமபோற்சுற்றிவரும்

தேசமதிலேஷைபர தேசிமறைவேதியரை
ராசர்காவாவிட்டா னன்றல்லபாவமுமாம்

சாகாவரம்பெற் றவர்க்குப்பயமில்லை
வாகாகப்பேசாத மௌனிகருக்குச்சண்டையில்லை கூளய

வித்தைகற்றோல்தந்தையால் மேதினியெல்லாம்புகழும்
கற்றதொருவித்தையது கற்பகத்துக்கொப்பாகும்

மெத்தவழகுடையோர் மேற்குலமேயானாலும்
வித்தையொன்றுமில்லாவிட்டால் விரையில்லாபூவாகும்

இருந்துயிர்நகமுந் தேசமன்னர்பல்நான்கும்
இருந்தவிடம்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை

மின்றாரில்தாசி வேதியர்நாய்கோழியுடன்
தன்மைசேர்பண்டிதர்கள் சாதிலொத்துவாழார்கள்

ஓங்குபொருட்சேத முயிர்ச்சேதம்வந்தணுகில்
சாங்கமுடனசிரித்தாற் றயிரியமவர்தெய்திடுமோம்

தர்மசிந்தையுள்ளோர்க்குங் கயாளபுருடனுக்கும்
எம்மாத்திரமபொருளு மில்லாளுமோர் துரும்பு

வீரமிகுசூரனுக்கு மேவலர்சேனை துரும்பு
பாரிற்றுறவிகட்குப் பார்த்திபனுமோர் துரும்பு

பெரியோருக்கற்பர்கைப் பிரயோசனந் துரும்பு
அரியகலைவாணியரு ளடைந்தோர்க்கவி துரும்பு

நூற்றிலொருசேவகனும் நாற்றுப்பத்தாயிரத்தில்
பார்த்தாலொருவன் பாவாணனென்பவனும்

பாங்கானவார்த்தைசொல்வோன் பதினாயிரத்தொருவன்
நீங்காதகொடையாளி லட்சத்திலேயொருவன் கூஉய

சினமென்பதென்பதொரு சிக்காமனையறுத்தால்
மனமென்பதென்பதுற்ற வாறேமுடித்திடலாம்

அரிதானமாதங்க ளனேகமாய்ச்செய்தாலும்
பொறுமையென்பதில்லாதேற் போமேவிழலாக

எத்தர்ம்மமானாலு மெண்ணித்துணிகவென்று
மிக்கதுணிந்தபின்னர் மேலெண்ணிறுலிழுக்காம்

பட்சிக்காசுபலம் பாலருக்கழுகைபலம்
மச்சத்துக்கேசலமாம் மன்னர்க்குதேர்பலமாம்

வாகனங்கள்தானுடையான் வழிநடைக்கஞ்சானும்
வாகுடனேபாலுடையான் வந்தவிருந்துக்கஞ்சான்

வஸ்திரமுள்ளான்சபையில் வரப்போகவஞ்சானும்
உற்றபணக்கார னென்றுக்குமஞ்சானும்

மானிற்கவரி மயிர்தடுத்தாலேகாது
மானபரணவ்வாறாய் வசையனுலுவுங்கேளானும்

மேஷந்தனக்கு மிரண்டுசெவியுமறுத்து
மாசுபடத்தேக மயிர்முழுதையுங்களைந்து

கூடுகுட்டியும்பின்னே தொடர்ந்துவருமாறதுபோல்
கேடுகெட்டமாண்பர் கீர்த்திகளுக்கஞ்சாரே

மச்சுவீடால்நிழல் மாணார்தனைக்கோடு
நிச்சயமாய்க்கன்று சேர்மிலைவானாகும்

கட்டாகச்சீதள காலத்திலுஷ்ணமதாய்
திடமுடனுஷ்ணத்திற் சீதளமுமாகுமல்லோ

சாதித்தொழிலைசெய்வார் தனக்குக்கெடுதியில்லை
மாதவமாய்க்காலமறிந்துசெபஞ்செய்பவர்க்கு

ஏதேதுபாவங்க ளில்லையொருநாளுமென்று
நீதிமனுநூலி னிகழ்ந்தினார்முன்னோர்கள்

பொன்னைத்தரிசித்தாற் போகமதுசம்பவிக்கும்
வனமலரைச்சேர்ந்தால் வாசமதுசம்பவிக்கும்

பெரியோரைச்சார்ந்ததற்கு பெருமைமிகவுண்டாகுஞ்
சிறிதானதுர்ச்சனரைச் சேர்ந்தவர்க்குக்கேடுவரும்

விண்ணதனிலேயிருந்து விழுமழைத்துளிதான்
மண்ணிற்சுடுமிருப்பில் வந்துவிழுமுன்சுவறும்

தாமரையில்விழுந்தாற் றழாதுயாது
சேமத்திரைகடலின் சிப்பியிலேவிழுந்தாக்கால்

விலைமதிக்கவொண்ணாத வெண்முத்தையீனும்
தலமீதிலிவ்வாறு சற்பாத்திரமறிந்து

கொடுப்பதேகர்மமிந்தக் கூறறிந்துசெய்யாட்டால்
விடுப்பாய்கொடுப்பதெல்லாம் வீணுகுமென்றனரே

காரிருளிற்புற்றடியிற் கண்டபழுதைதனைச்
சீறுமுயர்பாம்பென்று செப்புவார்தப்பாமல்

உத்தமர்கள்தாசிவீட் டோரமாய்ப்போனாலும்
சத்தியமாயுத்தமரைச் சமுசயமாய்ச்சொல்லார்கள்

வீணகப்போகா விடந்தனிலேபோகவொண்ணா
தோணமற்போனாற் றுன்பம்வரும்பின்னிழுக்காம்

தேசிவந்தாற்பசுவைத் தேடாரதிமோகந்
தாசிவந்தாற்றனது தாரமதைத்தேடார்கள்

ஆசையாலெப்பொருளும் அபகரிக்கவேண்டுவோர்க்கு
ரோசமில்லைக்கடுகெட்ட லுத்தரிலும்லுத்தர்களாம்

அன்னைபிதாகுருக்கோ டரசாளரசருடன்
பின்னையபெரியோர்கள் பிராணனிமனைகிதர்கள்

ஆகவெயிவர்களை மறவாதிருந்தாலும
போகலாமேவலியப் பிழையொன்றுமினமயில்லை

மலைகானஞ்செல்லநன் றல்லாதுதான்தரித்த
கலைகிழித்துக்காவியிட்டுக் கௌபீனங்கட்டநன்று

ஓடெடுத்துவாங்கியே யுண்ணநன்றியாவர்களும்.
நாடாவனத்தினிற்போய் நாடுவதுநன்றாகும

ஈயாதலோபியிட மேனும்புலவருக்கு
ஞாயமிதுவென்று நவின்றாரேமுன்னாலோர்

வெள்ளாட்டியானவளை விரகத்தினாலணைந்தால்
உள்ளகுலமும்பேர் பொழுக்கமெல்லாங்கெட்டுவிடும்

வேசையரைச்சேர்ந்தாக்கால் வெட்கமில்லைபொன்சேதம
ஆசையாலேவிதவை யானவளைச்சேர்ந்தாக்கால்

ஆயிசுமேதான்குறையு மகல்வாளிலட்சுமியும்
தூயபிறர்தாரத்தைச் சோரத்திற்சேர்ந்தாக்கால்

வன்னரகஞ்சேர்வரிவை யாகாதுநாலுமென்று
முன்னோர்வடநூலில முறையாயுரைத்தனரே

செல்லுமிடமானாலுஞ் செல்லாவிடத்தினிலும்
பொல்லாதகோபமொரு போதும்வைக்கலாகாதே

இன்னவகையின்றனு செய்துசெய்தாலெனவே
தன்னிலறிந்துசெய்யா தாராகினஷ்டம்வரும்

கள்ளுண்டாலுற்ற காரணமெல்லாம்வெளியாம்
கொள்ளையருமபிற் கொலைகள்வந்துசேரிடுமே

சூதாடியிம்மையிலே துன்பம்வருமல்லாது
சேதாரமாகுந் திரவியங்களுள்ளதெல்லாம்

ஆகாயவீதிக்கு ஆதித்தன்ரத்தினமாம்
வாகானகல்விக்கற்றோர் மாசபைக்குரத்தினமாம்

சயனந்தனக்குரத்னஞ் சார்ந்தவழகுள்ளபெண்கள்
நயமானவீ[illegible]

[illegible]
மேன்மைசெது[illegible]

ஆருக்குந்திருமா தனுக்கிரகமுள்ளளவும்
பாருக்குள்ளெந்தப் பகையுநெருங்காது

கூடாதகாலங் குறுகிவருங்காலம்
வீடானதிலிருந்தும் வினைவிளையுந்தன்னாலே

தாரித்திரர்பசி தாங்குவதேமிக்ககொடை
ஏற்றபணக்காரர்க்கீவதுவேவட்டியுமாம்

எளியோருடனெதிர்த்தே யெண்ணமல்லவைவதிலும்
விழிகாணாதோடென்று விரட்டுவதேநன்றாகும்

அன்பில்லாதாரிடத்தி லதிகவுறவதிலும்
பின்புமவருடைய பெருத்தபகைநலமாம்

வேண்டாப்பெண்டுரை வீணாய்வைத்தேசுவதில்
வேண்டாம்நீயென்று விரட்டிவிடலுத்தமமாம்

சாலவேவாழ்வுடையோர் சாவதற்கஞ்சுவராம்
சாலவறுமையுற்றோர் சாவதற்கஞ்சாரும்

பாரிலேயீகையுள்ளோன் பாக்கியமெவ்வாறென்னில்
பூருவ்பட்சப் பிறைபோல்வளர்ந்திடுமாம்

ஈயாதான்செல்வமது எத்தனையுண்டாயிடினுந்
சாயுமமரபக்ஷ சந்திரன்போற்றேய்ந்திடுமாம்

என்னவறுமையுறினு மேற்பதொன்றில்லாவிட்டால்
அன்னவனேபாக்கியவா னாகுமென்றுசொல்லிடலாம் ௩௪௰

பாரித்தசெல்வர்கள்தான் பலர்க்குதவியில்லாவிட்டால்
தாரித்திரரென்று தப்பாமற்சொல்லிடலாம்

கையானதுநமது கண்ணிலேகுத்திவிட்டால்
கையைத்தறிக்கின்ற காரணமுண்டோவதுபோல்

இளையோர்தமையடைந்தோ ரேதுகுற்றஞ்செய்தாலும்
பிழைபொறுக்கவேண்டுவதே பெரியோர்முறைமையதாம்

அழகிளமைமூப்பு மயிஸ்வரியமிந்நான்கும்
வளமுடனேநம்முடைய மரணவரையில்லாது

நன்னயஞ்சேர்பாலுடனே நல்லதண்ணீருங்கலந்து
அன்னத்தின்முன்புவைத்தா லாவின்பாலமட்டுமுண்ணும்

தண்ணீரைத்தள்ளுந் தகைமைபோலேயுலகம்
விண்ணாணமாயுரைத்தா லிந்நூலைப்பாராமல்

எண்ணியேநுண்ணியனா லென்பதனைக்கற்றக்கால்
மண்ணிற்சுகமும்வரும் மறுமையிலேசொற்கமுறும்

இட்டமுறுமோகஸ்திரீ யேஇகழ்ச்சிசெய்தாலும்
திட்டியடித்தாலுஞ் சினம்வரவேமாட்டாது

இன்பம்பொருளுமிக வெய்துவதானாலுமதிற்
றுன்பம்வருமென்றறிந்தாற் சொற்பனத்தினுநோக்கவொண்ணு

பயனில்லாவார்த்தைசொல்லிப் பலநாளுங்கோளுரைத்தால்
கயவாயவர்செய்யுந் தர்மம்பலியாது ௩௮௰

ஊரார்பகைதுன்ப மோயாமகாவறுமை
மாறாதெனவுமுன்னாள் வள்ளுவனார்சொன்னாரே

வாழ்வுள்ளோரானாலு மகாஞானியானாலும்
தாழ்வுள்ளோரானாலுந் தயிரியவானானாலும்

நாடொப்பனசெகிழ வாகாதொருநாளு
மூடத்தனமாக முன்பின்னாய்ச்செய்பவரும்

அருபியுமான அலகையோடொக்குமென்றும்
பிறகவரைச்செய்த பிணத்தோடேசேர்க்கவென்றார்

பொருளில்லாதார்க்கிந்தப் பூமியிலேகீர்த்தியில்லை
அருளில்லாதார்க்கு அவ்வுலகத்தேதுமில்லை

ஊன்தின்பவர்க்கு வொருபோதருளுமில்லை
தானதர்மஞ்செய்தாலும் சாம்பரிலேவிட்டநெய்யாம்

வாக்கிலொன்றுபேசி மனதிலொன்றுவைப்பதுவும்
யார்க்குநல்லாமென்றுகள்ள வாசாரஞ்செய்வதுவும்

காமக்குரோதமுற்றுக் கன்னியரைக்காதலிப்பார்
மேன்மைச்சடைவளர்த்து வெண்ணீற்றைப்பூசிடுவார்

தாடிவளர்த்து தலைமொட்டைசெய்திடுவார்
பாடிப்படித்துப் பாதுகையின்மேல்திரிவார்

மகத்திவருமல்லவல்ல வாய்ப்பிழைப்புக்குத்திரியும்
செகச்சாலக்காரரிவர் சித்தியொன்றுமிலலையென்பார். ௩௯௰

ஆவென்றபாவமொன்று மற்றோர்பிறவியறும்
சீவன்முத்தனுகுமென்று செப்பினார்முந்நூலோர்

பிறவுயிரைக்காத்தல் பேதமில்லாமனது
விரதபங்கமில்லாமை வெகுளாண்மையிந்நான்கும்

தவமிதுவாமென்றுந் தங்குமெய்ஞ்ஞானமென்றுஞ்
சிவயோகியாவமென்றுஞ் செப்பினார்வள்ளுவரும்

மன்னவரேயானாலும் மற்றெவர்களானாலு
மென்னவிதமாமோ ரிடர்வருமென்றேயறிந்தால்

கைத்தாணயமதனைக் காறுமற்போனக்கால்
மகத்தாணவாழ்வுகெடும் மாநிலத்திற்றுன்பமுண்டாம்

மாறினிலையும் வல்பிணியுந்தீக்கோளும்
வேறுபகைவர்கள்வர மேலுமேவற்பகையும்

வாராதுதற்கால வகையறிந்துதீர்ப்பவனை
ஆராய்ந்தறிந்து அவனைத்துணைகொள்வதாம்

ஈகையில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிருக மதனிலேசேர்க்கவென்றார்

தலமீதில்மிக்கான சாத்திரங்கள்கற்றாலு
முலகவியற்கைதனை யொன்றும்விடலாகாது

இல்லாதாராலு மிரந்துமுலகவளம்
வல்லமையாய்ச்செய்தவரே மாதவருக்கொப்பாகும் சஈ

வலியாரெளியாரு மானவான்மூவரிட
மலிவானகோபங்கள் வைத்தாரேயாமாகில்

நாடாளாம்லட்சுமியும் ராசர்பகைநேருங்
கேடாய்முடியுமென்று கிளர்த்தினளவ்வையுந்தான்

எப்போதுங்கீர்த்தி சற்றுமில்லான்றனைச்சுமக்கும்
வெப்பினற்பூமி விளைவுகுறைப்போய்விடுமாம்

குற்றமில்லாமற் கொடுத்துபுகழ்தேடாரை
செத்தபிணத்தோடே சேர்க்கவென்றார்வள்ளுவரும்

காலம்.

தந்தைதாய்புத்திசொன்னாற் றள்ளிமுனியுங்காலம்
நிந்தனையாய்சற்குருவை நிகழ்த்துங்கொடுங்காலம

பெரியோரைத்தூஷணித்துப் பேய்க்குதவுமிக்காலம்
அரிசிவனைநிந்தனையா யகம்பேசுமிக்காலம்

மெய்யேபொய்யாங்கால மேலோர்கீழாங்காலம்
பொய்யேமெய்யாகப் பொருந்துமிதுகாலம்

வன்சமரிலோடினவர் வரிசைபெறுங்காலம்
அஞ்சியேயாளடங்கி யரிவையர்மேலாங்காலம்

இன்பமுறுநூல்படித்தாலிகழ்ச்சியுருங்காலம்
பண்பில்லாநையாண்டிப் பாட்டைமெய்க்குந்துற்காலம்

இனிதானசற்குணர்க்கொன் றீயாக்கலிகாலம்
அனியாயக்காரருக்கு மடிக்குதவுந்தற்காலம் சாய

பெண்டாட்டிவைதாலும் புருஷன்குறியாமற்
கொண்டாடிக்கொண்டிருக்குங் குலாமருக்கேயாங்காலம்

ஆனகலிகாலத் தடைவிதுவேயானாலு
மானபரனானவனும் வையகத்திலுண்டெனலாம்

இருப்பார்க்கொருகடனா மெய்த்தாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க் குதவுவாரிக்காலம்

ஆசாரந்தர்மங்க ளங்கசுத்திமூன்றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளே மேல்வட்டமாங்காலம்

தேடியிடுவார்களுக்குத் தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்டுகள்வாய்க்குங்காலம்

சுகமாய்க்குடிப்பிறந்த சுதாகார்க்குமேன்மைகொஞ்சம்
விபசாரத்திற்பிறந்தோர மேலவராமிக்காலம்

கொண்டபெண்ணைவிட்டுக கொடிசானலவ்வாடி
முண்டைகளைக்கொண்டலையு மூடர்மேலாங்காலம்

சொந்தமணவாளனையுந் தூஷணித்துச்சோரத்தில்
அந்திபகலூர்சுற்று மவிசாரிக்காங்காலம்

மேற்குலமுங்கீழ்குலமும் விபசாரத்தில்மிஞ்சி
வாகுபெறும்வேசையர்கள் வறுமைக்குள்ளாங்காலம்

பிள்ளைவயதில்மிகுத்தாற் பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால் சீஷன்குருவைத்தேடான்

பெண்டானவள்ளியவள் பேச்சில்மிகுத்தாக்கால்
கொண்டமணவனையுங் குறியாகவெண்ணாளாம்

பாரோர்கணோய்தீர்ந்தாற் பண்டிதனைத்தேடார்கள்
சீரானசெல்வம்வந்தாற் றெய்வமதைப்பேணார்கள்

தன்னுடையமாதா தமையன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவி மாமியாரானவரும்

தெய்வகிகான தேசிகனார்தேவி
யைவரையுந்தாயென் றருளினார்முந்நூலோர்

பெற்றபெண்போலவே பேணிமருமகளை
வைத்தாதரித்து வருமாமியேதாயாம்

தந்தைதனக்கிளைய தாரமந்தகைகேசி
பிந்தவருஞ்சித்ராங்கி பிள்ளைகட்குச்சத்ராதி

பின்தாரப்பிள்ளையென்று பேதகமில்லாமனைக்
குந்திதனக்கொப்பான கோதைமுதல்மாதாவாம்

பிதா.

தன்னையேபெற்றவருஞ் சற்குருவுமன்னவரும்
மன்னுந்தமயனுடன மாமனைவளர்த்தவரும்

வித்தைதவருவித்தோர் வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருவாபத்து வரும்போதுகாத்தவரும்

ஓரொன்பதுபேரு முற்றபிதாவென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்

கல்விவருத்துக் கடனென்றுமில்லாமற்
செல்வமுடன்வைத்த திறவானோர்தந்தையுமாம்

மைந்தர்.

அற்பராம்நூறுபிள்ளை யானாலும்பெற்றுமென்ன
சற்புத்ரனொன்றுநூற் றலைமுறையெல்லாம்விளங்கும்

தந்தைதாய்வாக்யக் தமயன்குருவாக்கியம்
சிந்தைதனிற்சத்தியமுந் தெய்வவிசுவாசமுடன்

இத்தகைமையாறுடையோ னினியதசரதன்றன்
புத்திரனுக்கொப்பான புத்திரனேபுத்திரனும்

எத்தனை கான்செல்வத் தியல்போடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வு போசனமுநஞ்சாகும்

தந்தைதாய்வாக்பமது தன்னைபரிபாலித்தோர்
நந்தா தசரதனும் ராஜகுமாரனென்பார்

பிதாவுடையவாக்கியம் பிசகாதுகாத்தவன்றான்
சுதாகாரில்மிக்க சுதன்பரசுராமனென்பார்

ஆசான்றன்வாக்ய மனுவுந்தவறாதான்
வாசாலன்சத்யமுள்ள வாய்மையரிச்சந்திரனும்

தமயனுரைதட்டாத சற்புத்திரரானோர்
தமையுமங்கேசீர் தூக்கிற் றருமனுக்குகேரிளையோர்

தந்தைபேர்தன்பேருந் தாரணியிமேலவிளங்கித்
தந்தைதாய்சொல்மறுக்காத் தன்மையுமேனபுத்திரனும் ௬௪௰

தந்தைக்கிசைந்தமறு தாரமேதன்றாய்ப்போல்
வந்தனைசெய்மைந்தர் மனுகுலத்துமைந்தரொப்பார்

நல்லார்பொல்லாரென் றிரண்டுவகையாயுலகஞ்
சொல்லுவதைவிந்திலுற்ற சுதராலறிந்திடலாம்

சோசியம்.

உற்பவித்தாளும்பின் ஞெனபதுடஞென்பதுவும்
வைப்பொதும்வைக்கவொண்ணு வழிபோகலாகாது

வல்பிணியுந்தீருது மருந்துண்ணலாகாது
கல்யாணமெண்ணெமயிர் களைந்திடவுமாகாது

இல்லம்புகுத லினிதுண்ணலும்விதைக்க
நல்லறங்கள்செய்திடவு நற்பணிகணற்றாசு

தானுந்தரிக்கவிது சார்ந்தநாளாகுமென்று
மேநாட்கணித விதியாலுரைத்தனரே

திங்கள்முதநாளுமது சென்றகடைநாளுடனே
மங்கையர்கள்பூப்புநாள் வாசியமாவாசியிலும்

சென்மநாள்மூன்றிலுஞ் சேயிழையைப்புணர்ந்தால்
தன்மமல்லவாழ்நாளுந் தன்குறையுநோயணுகும்

தலைக்கெண்ணைபோசனமுஞ் சவரமுடனித்திரையும்
கலத்தைக்கொடுக்குமந்த நற்கிழக்குதெற்கதுவும்

மற்றவிருதிசையு மாகாதுமத்திபமாம்
அந்தமழிவதல்லா லாயுள்விர்த்தியில்லையென்றார் ௪௫௰

இலட்சுமி யிருப்பிடம்.

மாயவன்றன்மார்பினிலு மன்னரிடத்தினிலுந்
தூயதொருவில்வந் துளவங்கடப்பமலர்

தாமரையின்பூவினிலுஞ் சாகரத்திற்கங்கையிலும்
சேமமுறுமியானை தேசிமுகத்தினிலும்

ஊதுகின்றசங்கமுட னுத்திராட்சஞ்சாமரத்தில்
கேதனத்திற்றேரினிலே கெட்டபோதுன்னூர்பால்

சுத்தமுள்ளவீரரிடஞ் சுத்தமாகியமனையிற்
சத்தியஞ்சேர்வாக்குடையோர் தர்மபரிபாலனர்கள்

அழகுஞ்சுசிகரமு மமர்ந்தகுணப்பெண்ணிடத்தில்
வளமைதரும்பசுக்கள் வாழுமிடந்தனிலும்

மாகனம்போல்சுத்த மானவிடந்தனிலும்
கோகனகமாது குடியிருப்பாளெந்நாளும்

மூதேவியிருப்பிடம்.

சோரஸ்திரீயிடத்திற் சூதகப்பெண்ணிழலில்
பாரக்கிடாவிற் பலவிளக்காப்பேரிடத்தில்

சூளைப்புகையிற் சுடுகாடெரிபுகையில்
காளையாங்காமுகர்பால் கழுதையிடத்தினிலும்

கள்ளிநிழலதிலுங் கைம்பெண்கடன்னிடத்திற்
கொள்ளிக்கரியுமியிற் கொட்டைநூற்பாரிடத்தில்

நீசர்நிழலில் நிட்டையில்லாரிடத்திற்
பேசுங்கடுஞ்சினத்தோர் பேடியிடந்தனிலும் சுசூய

சுத்தமில்லாமனையிற் சுராபானரிடமிரவில்
வெற்றிபெறும்வேல் விரைவினிழலதனிலும்

என்றுஞ்சுசிகரங்க ளில்லார்விதனைகளை
மொன்றியணைவோர்பா லுதயந்துயில்வோர்பால்

மீதுணருந்துவர்பால் மேன்மைசற்றுமில்லாத
மூதேவியாளுநித மோடிக்குடியிருப்பாள்

பாங்காகநாளும் பகற்புணர்ச்சிசெய்பவருந்
தாங்காதிடக்கையாற் றம்பூலந்தின்பவரும்

போசனங்கள்செல்கின்ற போதிற்சிரசினிலே
தூசுபுனைந்துணட துன்மார்க்கராணவரும்

காலையிலுமாலையிலுங் கண்துயில்வார்தன்னுடனே
நாலுபேரானவர்பா லட்சுமியும்மில்லாளே

பகை.

பாரம்பெரியசத்தி பஞ்சுதனக்கோனுஞ்
சூரியனுஞ்சந்திரனுந் துட்டரவிநால்மறையும்

சிற்றெறும்பால்யானை திகைக்குமதுபோல
அற்பரால்மேலோர்க் கவதிகளும்வந்தெய்தும்

தந்தைதாய்சொற்கேளார் தடுப்பார்கொடுப்போனை
அந்தக்கொடிபோரு மட்டமத்திலேசனியாம்

சபையிற்பிரசங்கந் தன்னிற்பழுதுரைப்போர்
அபயமிட்டுப்பேச்சில் மிச்சமானதொருபெண்டிரும்

தாமாய்விரோதியுடன் றுணிவர்கள்மூவருந்தான்
சேமத்திலேவந்த செவ்வாய்க்கிணையெனலாம்

தன்னைமிஞ்சுமடமை சந்திராஷ்டப்பங்குக்காய்
தன்னைச்சபையேற்றுந் தம்பிசென்மச்சூரியனும்

சகோதரற்குவஞ்சனைசெய் தமயனுமென்பவன்றான்
மகாபாவிமூன்றா மிடத்துவியாழமதாய்

பார்த்திபர்கள்மெத்தவென்று பழுதுசொல்லக்கெடுப்போன்
ஏற்றிடும்பொல்லாத இராகுவுடன்கேதுவுமாம்

சாலக்கடன்பட்ட தந்தையாருமார்க்கானு
கூலமாயுட்பட்டுக் கொண்டுதிரிதாயாரும்

வித்தையில்லாப்பிள்ளையுடன் வேசையாய்ப்பெண்டாட்டி
சத்துருவர்நால்வரென்று சாற்றினார்முன்னாலோர்

வேங்கைபதுங்குவது வேழம்பின்வாங்குவதும்
பாங்காய்பகையுறவும் பாம்புசாய்ந்தாடுவது

நல்லோர்பெரியோர்க ணயந்துவணங்குவது
மெல்லவிடச்சிரிப்பும் விழிமகிழுமின்னொளியும்

மிக்கானவில்வளைவும் வேழமுறங்குவதும்
உக்கிரதளஞ்சமரி லொன்னலார்கொடுக்கும்

இத்தகையாமீறைந்து வெளிதாய்நினைக்கவொண்ணா
மத்தியமாமுயிர்க்கு வாதைகளுமுண்டாகும்

சொற்குற்றம்பாராட்டித் தொழுவழக்கைச்செப்பவர்போல்
பற்காட்டிச்சீவனங்கள் பண்ணித்திரிவதுதான்

வலிதானவாடரவின் வஞ்சப்படத்தினுள்ளே
எலிவாழ்ந்ததாரென் றியம்பினார்முன்னாலோர்

பண்பாய்க்கலிவுறவு பண்ணவந்தாராகமிது
பின்பவரையும்பிரிந்தார் பிணக்காம்பகைநேரும்

அங்கபங்கமானாலு மசூசியங்களானாலும்
தங்கருலத்தேகு தாழ்வுற்றிருந்தாலும்

நிந்தனைகள்சொல்லி நெகிழ்ந்துறைக்கலாகாது
எந்தக்குலமு மிழுவில்லா தில்லையில்லை

துன்பம்பழுபகையுந் தொடரும்பழிபிழைகள்
பின்பவர்க்குமெய்தும் பெருமைசற்றுமில்லாது

பகை வெறுப்பு.

நேர்ந்தவினைவலியு நேர்வார்கடன்வலியும்
சேர்துணைவலியுஞ் சீர்தூக்கிச்செய்வதுமாம்

கூடாதகாலமடைக் கொக்கதுபோலேயிருப்பாம்
கூடுமந்தக்காலமடைக் கொக்குபோல்வெற்றிக்கொள்வாம்

நட்பவெறும்பெலாங்கூடி நோக்காமலேயேற
ஒப்பில்கருங்குழிந்த வுவணைபலவெல்லுதலாம்

மெள்ளமெள்ளப்பாய்ந்த நீர்முகக்கடுமலையின்
கல்லைக்கரைக்குங் கதைபோற்பகையருத்தல் ௨௩௰

காலமதுவறிந்து காக்கைவெல்லுங்கூகைதனை
காலமதுதப்பினல் காக்கைதனைக்கூகைவெல்லும்

சிலநாளாயானையொரு தேங்காயினேடடக்கி
பலிதமுள்ளவேளைகண்டு பாகனையேவென்றதுவாம்

பண்பாகக்காலமது பார்த்துபகைசெலுத்தும்
பண்பிதுவாமென்று பகர்ந்தாரேமுன்னோர்கள்

உற்றபகைவரென்று லுள்ளாக்கிக்காரியங்கள்
பெற்றபிறகுமதை பேதமதைக்காட்டுவதாம்

காலத்தின்சீலன் கண்டறிந்துகொள்ளாதார்
கோலமழிந்து குரங்காவார்தப்பாது

சேரிடம்.

சந்தனவிருட்சமதைச் சார்ந்தமரமவ்வாசம்
அந்தமகமேரனைந்த வக்காகமன்னிறமாம்

பாலில்கலந்தநீர் படிமணிக்குள்வடமும்
சாலமரகதக்கற் சாய்கைபட்டதிம்மூன்றும்

தன்னிறங்களைக்கொடுக்குந் தன்மைபோல்நல்லோரை
நன்னயமாய்சேர்ந்தோற்கு நற்குணமேயுண்டாகும்

நல்லாரைக்காண்பதுவு நல்லாற்சொற்கேட்பதுவும்
நல்லார்குணமுரைத்தா னன்மைகண்டாநற்றுளம்

ஆசாரமன்பு மறிவடக்கமுள்ளோரைத்
தேசத்திற்கண்டு சேர்ந்தாற்பெருமைவரும்

கதிரோனுதிக்கையிலே கண்டபெருஞ்சாய்கை
மதியமதிலேகுறு வாறுசிரியோரிணக்கம்

மதியந்திரும்பினபின் வாதிக்குஞ்சாய்கையைப்போல்
சதிராய்ப்பெரியோரைச் சார்ந்தாலேநன்மைவரும்

கற்றபெரியோருரவு கரும்புநுனியிலிருந்
துற்றதலவேர்வரைக்கு முண்டருசிபோலாகும்

சிறியோருடனுறவு தின்கரும்படியிலிருந்
துதியநுனிவரைக்கு முண்டருசிபோலாகும்

செல்லாவிடம்.

கடலோடுங்கப்பலது கரையிலேயோடாது
புட்வியிலேயோடுந்தேர் புனலிலேயோடாது

தண்ணீரில்முதலையதைத்தாங்கிவெல்லமாட்டாது
நண்ணுபுலிகாடன்றிநாடுற்றாற்கேடடையும்

செல்லுமிடமிவ்வாறு திறஞ்செலுத்தவேண்டுமென்றிச்
செல்லாவிடந்தனிலே திறஞ்செலுத்தக்கூடாதே

யோகம்.

மன்னர்மெச்சிக்கும் வரிசையதிகாரம்
மன்னுஞ்சாம்பிராச்சியமும பட்டாபிஷேகமென்பார்

நல்லகுணமாகுமுன்னால் நாடிவலியவந்து
புல்கிடிலேயோகம் புத்தமிர்தசித்தமுமாம்

மண்ணிற்புதைத்தபொருள் வாதமுணைக்காசையுற்று
நண்ணுவார்க்கெய்தாமனண்ணார்கட்கெய்துவதும்

குஞ்சுப்பயிர்விதைத்து விளைவுகுன்றிப்போவதுவுங்
கொஞ்சம்பயிரிடுவோர் கூடிவந்துவாழ்வதுவுங் நாய்

கப்பல்வியாபாரங் கணக்குறைத்துப்போவதுவும்
சொற்பமாய்வாணிபஞ்செய் தோர்களுக்குகூடுவதும்

காணாமற்காணாமற் காவலர்கள்கேள்வியினால்
தோணாதலாய்வலியத் தொழில்கொடுத்துவாழ்வதுவும்

மேனாளிற்றங்கைதாய் விட்டகுறையாகுமென்று
காணாமுன்னாள்செய்திருந்த தர்ம்மமாவதென்னும்

அந்நாள்நற்பூவெடுத்து அர்ச்சனைகள்செய்ததென்றும்
இந்நாட்பெரியோருக் கீய்ந்துவரப்பெற்றதென்றும்

லட்சுமிகடாட்சமிந்த நான்குவகையோர்க்குமென்று
உச்சிதமாய்முன்னோ ருரைத்தாருலகோர்க்கு

திருமடந்தையேகில் சிறப்புங்கனமுமுண்டு
பொருளுந்துறும்பாகும் பொல்லாருநல்லோராம்

செல்லாதவார்த்தைசெல்லுஞ் செய்யுமரியாதையுண்டாம்
எல்லாருமேபுகல்வா ரெதிராளியுமுறவாம்

கீழோருமேலோராய்க் கிளையுமிகவிர்த்தியுண்டாம்
தாழப்பெருங்காற்றுத் தண்ணீர்போற்குடித்தும்

மணஊக்கம்.

வீரப்புலியுயிரை விட்டாலேதோல்கொடுக்கும்
சூரனுயிர்போமளவுந் தோர்வையென்றுபின்வாங்கான்

உத்தமியேயெங்காரு முயிர்க்குலையமில்லாமல்
சற்றுகிலும்பிறர்க்குத் தன்னியத்தைத்தான்கொடுக்காள்

ஏற்கைபோய்ச்சாலவுந்தா னென்னதுன்பமுற்றாலும்
ஊக்கமதுகைவிட்டா லுயிர்க்குலயம்வந்தெய்தும்

உள்ளஞ்சிதராம லொன்றினையேகைப்பிடித்தால்
தெள்ளிமருளுஞ் சித்திமுத்திரண்டுமெய்தும்

பல்லாம்நினைக்கவொரு பலனேதுமெய்தாது
அலைவாய்த்துரும்பதுபோ லலைந்துகெடுஞ்சித்தியில்லை

ஐம்புலனையும்சிரியோ ரடக்குவதுவேயருமை
செம்பொனனெல்லாந்தேடித் தினங்கொடுப்பதேயருமை

தெண்டிக்கவல்லவன் சினம்பொருப்பதேயருமை
கொண்டகணவற்கிசைந்த கொம்பனையுமேயருமை

தேசமொன்றில்பேதைமன நிற்பதுவுமேயருமை
தேசத்திவ்வைவனையுந் தெய்வபிறப்பெனலாம்

அளவிலாமை.

பெருங்கடலாழம் புருஷயோகஞ்சூது
மங்கையர்கடனமனமும் வஸ்துவின்றனிநிணமும்

வானளவுமாற்று மணலுமழைத்துளியும்
வானிலுறுகணமு மண்ணுண்டராசனையும்

உற்றபெரியோர்க ளுள்ளக்கருத்தளவும்
கற்றோர்கருத்துங் காமன்கணையகலும் ௫௩௰

மானிடர்கள்சென்ம மனுத்தொகையுமாமனையு
மானபருவதங்க ளனைத்துமதினிறையும்

பார்க்குள்ளோவிந்தப் பதினாறுவல்லபத்தை
யார்க்குமளவிடவு மாகாதுகாவணரே

இறந்தார்பிறந்தார்க ளிவ்வளவாமென்றாலுந்
துறந்தார்பெருமைகளைத் துகையறிந்துசொல்லவொண்ணு

ஆயுள்நிதானங்க ளாறிரண்டிலேகிரகந்
தூயநிகரெணநிலை சொல்லயெவராலுமில்லை

சூரியன்முன்னிற்கலாஞ் சுடுமணலிற்நிற்கவொண்ணு
ஆறணியுமீசர்முன்னே யஞ்சாமற்பேசிடிலும்

தேசமதில்முக்யச் சிவனடியார்முன்புநின்று
பேசவரிதென்று பெரியோருரைத்திடுவார்

வாரியினீராழம் வானளவுமாமலையும்
ஆறினகரைமணலுமாகாசத்தேயுதவும்

அன்பாமிவையைந்து மளவுகண்டுசொன்னாலுங்
கொம்பனையார்நெஞ்சக் குறிப்பறியவொண்ணாதே

மறுநீதிகாதல்.

வெள்ளம்பறவைகளும் விலங்குடனேவேசையர்கள்
உள்ளமிவைநான்கு மொருவழியாய்நில்லாதே

உதவி.

வாவியிநீரம்பலத்தில் வைத்தமரநிழலுந்
தாவுமணலூற்றுத் தண்ணீரின்பந்தலுடன்

பாங்கானசந்நிதியில் பழுத்தமரமானதுவுந்
தாங்கும்விபசாரி தனமும்நிலவினொளி

பார்க்குளவிவேகியர்கள் பாக்கியமிவ்வொன்பதுவும்
ஆர்க்குமுபகார மல்லாதுவீணலவே

நல்லோர்தேடும்பொருள்கள் நாவலர்க்கும்வேதியற்கும்
வல்லகுருவானவர்க்கும் மாதாபிதாவினற்கும்

புத்திரர்கடன்கினைக்கும் போற்றுமித்தேவதைக்கும்
உற்றசகோதரற்கு முண்டென்றுநம்பினர்க்கும்

தர்மமேசெய்பவர்க்குஞ் சார்ந்தவறிஞருக்கும்
இம்மாத்திரம்பேர்க்கு மெய்துமிவர்பொருளே

இல்லந்தனக்குத்தன் னேந்திழையாளேதுணையாம்
நல்லதேகந்தனக்கு நற்றுணவரேதுணையாம்

தேசாந்திரனுக்குச் சீர்துணையாங்கற்றகல்வி
மாசற்றிகபரத்தில் வருந்துணைதான்செய்ததர்மம்

வர்த்தகர்பால்வைத்தபொருள் மன்னவர்கடன்பழக்கம்
உற்றவிவேகிக் குபகாரஞ்செய்கதுவும்

பருவத்தில்பெற்றபிள்ளை பக்குவத்திற்கற்றவித்தை
தருணததிலீகைந்தும் தானுதவுந்தப்பாதே

என்னபகையானாலு மிடர்க்குதவிசெய்தல்நலம்
பின்னக்கவிசொலினு மேன்மைசெய்வரேபெரியோர் ௫௫௰

உதவாமை.

நாய்ப்பால்சொரிந்துமென்ன நாணல்மிகப்பூத்துமென்ன
பேய்பொன்னைக்காத்துமென்ன பேடிகையிலாயுதமேன்

எட்டிப்பழுத்துமென்ன மீண்டுதழைத்துமென்ன
பட்டுபெணிசித்திரத்திற் பண்ணியிருந்துமென்ன

சற்குணமில்லாப்பெண் தங்கநிறமாகியென்ன
மிக்கசபைக்கோழை மிடிகல்விகற்றுமென்ன

ஆட்டின்கழுத்திலதாதுவுநீண்டென்ன
காட்டினிலமெரித்தென்ன கானலிநீர்கண்டுமென்ன

வேசைக்குப்பொன்கொடுத்தேன் வீணருக்குகாறிசெய்தேன்
மாசுடையவற்பருக்கு வந்தென்னதிகாரம

காட்டுக்கரடிமயிர் கறுத்தநிறமாகி
நீட்டியிருந்தாலுமென்ன நெடுசக்குறையிலென்ன

இத்தனையாய்ச்சொன்ன விருதெண்ணிரண்டுமீயாத
லுத்தர்கள்தம்வாழ்வுக்கு வொத்திருக்குந்தப்பாதே

தேகியென்போர்க்கீயாத தேடாதமக்குபொருள்
ஆகிவந்தாலுமென்ன அழிந்துபோனாலுமென்ன

பேடியழகுகண்டு பெண்கள்மகிழ்வதும்
நீடுவஞ்சர்சொல்லை நிசமென்றிருப்பதுவும்

கானல்கண்டேயோடுங் கலைமானுஞ்சாலவுயிர்ப்
பாயிலவுகாத்திருந்த பச்சைக்கிளியதுவும்

தேனருந்தத்தாழைமலர் சென்றசுரும்பினமும்
தானுயர்ந்ததேன்கண்டு சப்பாணிமெய்ப்பதுவும்

புல்லர்களின்வாழ்வுகண்டு புகழ்பாடிப்போம்புலவர்
வல்லமைக்கொப்பெனறு மனுநூலுரைத்திடும

கல்லாமலேட்டினிலே கண்டெழுதிவைத்தவித்தை
உல்லாசவேசையர்க ளுறவுசதமென்றிருந்தும்

மறுதேசம்போனபிள்ளை வஞ்சருடனேநேசம்
வருமென்றேயன்னியாபால் வைத்தபொருள்பலதும்

தன்னைப்பெறுதொரு தந்தைதாயானவரும
பின்னுடன்பிறவாப் பின்னவர்கள்முன்னவர்கள்

பேறுகத்தம்வயிற்றில் பெற்றுவளர்க்காதபிள்ளை
ஊராருடையசெல்வமுள்ளன்பிலாதபெண்டீர்

சத்தியமாயீராறுந் தருணுதருணமது
உற்றசமயத்துக் குதவாதுகண்டீரே

ஆற்றிற்கரைத்தபுளி யனலின்மேலபோட்டவெண்ணெய்
காற்றிற்பரந்தபஞ்சு காட்டிலெரிந்தநிலா

விரித்தகமரினிலே வீழ்ந்தகொருபெண்பாலும்
பரித்துகடற்சுழியிற் பாய்ந்தடைந்தகப்பலுந்தான்

சுட்டமண்ணுண்டிலே தெளிந்திட்டபங்கீரும்
இட்டமுடன்விழலுக் கிறைத்தகொருநீரும்

வீணருக்குச்செய்தநன்றி வேசைக்களித்தபொருள்
காணுமிவைபத்துங் கைக்கூடாதகாரியமாம்

சற்பாத்திரமறிந்து தானஞ்செய்யாத்தருமம்
உப்புகளர்தனிலு ஊவர்நிலத்திற்பெய்தமழை

பாம்பின்வாய்த்தேரை பரத்தைக்களித்தபொருள்
மேன்பாடுபெற்றபுவி மேல்தரிடஞ்சேர்ந்தபொருள்

தானமாயாவருக்குந் தாரைவார்த்துக்கொடுத்துப்
போனபொருளநமன்கை புகுந்தொருமன்னுயிரும்

ஆனைவாயினகரும்பு மனைகடந்துபோனவெள்ளம்
வானிலத்திற்கொள்ளைபற்றி வாதையிலும்போனமுதல்

வையகத்திலொன்பதுவும் வாராதுவந்தாலும்
ஐயோருலுத்த னரைக்காசமீயானும்

கவரிமான்மயிருங் கற்புடையாள்ஸ்தன்னியமும்
அவையாதவேங்கையின்றோ லதிருசானைகவேலும

ஆனாலும்லோபிபொரு ளொந்தும்மைரவுயிர்கள்
போனலேயன்றிபொரு போதினுமேகிட்டாதே

கன்னுக்கழுகெட்டிக் கனிதாழையின்கனியும்
வன்னமுருக்கின் மலரினையாலேதுபயன்

தாழைமடலோபெரிது சன்னமலர்மடலாம்
தாழைமலர்வெய்யோன் சாய்கைபட்டால்வாசம்போம்

சன்னமகிழமலர் சருகாககாய்ந்தாலும்
வினையில்லாத்தன்மணமும் விட்டகன்றுபோகாது

ஆழியில்நீரதிக மள்ளியுணலாகாது
ஆழிபருகூற்றுவரு மன்னீநகனீராம்

இங்கிவற்றைபொப்பாக ஈகைசற்றுமில்லாத
அங்கம்பெரிதா யழகாயிருந்துமென்ன

தேசமதுவில்லாவிடினுஞ் சிறியவுருவானாலும்
பாசமறுசற்குணமும் பலர்க்குதவியேபெரிதாம்

வேசையர்கள்நட்பும் விளக்கினதுவொளிவும்
மோசமிலையிவ்விரண்டு மொன்றுகுமென்றனரே

கைப்பொருளற்றால்வேசி கடுகளவுநட்பில்லை
மெய்ப்பாகவெண்ணெயற்றால் விளக்கொளிவுசற்றுமில்லை

கற்பிறப்புத்தமர்.

பாவபுண்ணியமறிவார் பலபொருளுமிச்சியார்
பூவைபலனேக்கார் புராணநெறியுணர்வார்

மாதவங்கள்செய்வார் வன்கொலைகண்டஞ்சுவார்
சூதாடராயராது துன்பத்துக்குள்ளாகார்
உய்யவேயிவ்வா றுடையவர்கள்சற்குணராம்
தெய்வத்தின்றத்துவமாய்ச் செப்பினார்முன்னோர்கள்
மாதாபிதாகுரு வானவரத்தெய்வத்தை
மீதாய்ப்பணியும் விசுவாசமுள்ளவர்கள் ருகய

தன்தாரமன்றிமறு தாரத்தைநோக்கார்
புத்திமகிழ்ந்தநிதி பூசைபுரிவோரும்
சத்தியமொழிபூர்வ தர்மபரிபாலனர்கள்
சுத்தமுறுநந்தவனச் சோலைபதுவைத்தவரும்
பார்க்குட்சகாயமதாய்ப் பாட்டைதனைச்சீர்திருத்தி
மார்க்கத்தண்ணீர்ப்பந்தல் மண்டபங்கூவம்வாறு
செய்யுமகாட்டண்ணிய்த் தேகராறுடிசத்தமர்க்கு
எய்யாமலைபோலே யாது துன்பம்வந்தாலும்
வெய்யில்முனைக்கண்டு விலகும்பனியெனப்போம்
கைலாசகற்பதமெக் காலுமிவர்க்குண்டாகும்
தாமரையின்மாமலருஞ் சவ்வாதுபுனுகுடனே
பூமருவுதேனும் புணரியுறசிப்பிமுத்தும
பொன்னுங்கவரிமயிர் புகழ்சேர்கோரோசனையும்
நன்னயஞ்சேராவின்பால் நற்றாசுபட்டதுவும்
ஈதுபத்தானவகை யெங்கேபிறந்தாலு
மேதைபெற்றாற்போல்நல்லோ ரெக்குலத்தோராயிலென்ன
உப்புங்கர்ப்பூரமத வொன்றுபோலேயிருந்தும்
உப்புக்குக்கற்பூர முயர்ந்தவிலையாகுமன்றே
எல்லோருக்குரூப மொன்றாயிருந்தாலும்
எல்லோர்தமக்குறிய ராவரோபாவிகள்தான் கூய

பங்கமுற்றமூடர் படபடத்துப்பேசுவது
வெங்கலத்தினோசை விதமாகுங்கண்டீரே
நல்லதங்கத்தி னோசம்போற்சிறுக
மெல்லமிருதுச்சொல் விளம்புவாருத்தமர்கள்
பன்றியைக்கண்டால்யானை பாதைவிலகுதல்போல்
நன்றியற்றபேதையர்க ளானோர்வரவுகண்டால்
அந்தவழிவிலகி யப்பாலேபோகுவது
சிந்தைதெளிமேலோர்கள் செய்கையென்றுசொல்லதுவாம்

நன்னயஞ்சேர்பொன்னும் நற்பாலுஞ்சந்தனமுங்
கன்னல்தனையுமென்ன கண்டனைகள்செய்தாலும்

மூக்குணமேகாட்டு முறையோர்பெரியோர்க்குத்
தக்கயிடர்வந்தாலுஞ் சற்குணம்போதாதே

சிவயோகியானவர்க்குச் சென்மமொருக்காலுமில்லை
தவஞ்சேர்சுவாதி தனக்கனுவும்பஞ்சமில்லை

காலைதுயிலொழிதல் காணுமலேபுணர்ச்சி
மாலைமுழுகி மனைதனிலேசெல்லுவதும்

உற்றோரோடுண்ண லுயிரோம்பலிவ்வாறும்
இத்தலத்தில்வாழ்வோர்க் கியல்பென்றுரைத்தனரே

உற்றபசுவானதுவு மோர்கன்றையீனும்
பத்தானகுட்டிகளைப் பயிலும்பெரும்புலிதான் ௬௰

கோரமதுசெய்தவற்குக் கொம்பிருந்துமேபசுதான்
வீரமில்லாசற்குணத்தால் மேன்மைமிகவுண்டாகி

வங்கிஷமும்விர்த்தியாம் வன்புலியின்கோரத்தால்
பங்கமுறுகுட்டியது பத்தீன்றும்விர்த்தியில்லை

நன்மைதுன்மைரண்டுமிந்த நாட்டினுக்குத்தாட்சியதாய்
உண்மையிதுவென் றுரைத்தார்மனுநூலோர்

தெய்வதரிசனங்கள் தெய்வவிசுவாசம்
பொய்யாததானதவம் புத்ரர்களையோடுணவு

பெரியோர்கள்சேர்வைகுலப் பெண்ணுளனுபோகம்
குறையாதசெல்வமுநோய் கொள்ளாததேகவிர்த்தி

தன்மையுடனீன்ற தாய்தந்தைசெய்சவமு
முன்னோர்செய்புண்ணியத்தின் முக்கியமென்றேயுரைத்தார்

வித்வான்களானவரு மெய்ஞ்ஞானமுற்றவரும்
வெற்புபுலிநகமு மேன்மையுள்ளபூனைமதம்

காரானைதந்தங் கவரிமான்றன்மயிருஞ்
சீரானவாறுமெங்கே சென்றாலுமேன்மையுண்டாம்

நாயானதுசினந்து நமைக்கடிக்தால்நம்முடைய
வாயாலதைக்கடிக்கும் வாறுண்டோவையகத்தில்

அறிவில்லாமூட ரனேகமாய்வைதாலும்
பெரியோர்கள்வாய்திறந்து பேசாரொருக்காலும் ௭௰

சற்குணத்தினாலே தர்மமதுவந்தெய்தும்
துக்கம்வராதவர்கள் துடங்கினதுங்கைவசமாம்

நாரித்திரமுமில்லை தக்கோர்பயமுமில்லை
பாரிற்புகழ்விளங்கும் பரகதியுமுண்டாகும்

நற்பிறவி துற்சனர்.

எண்ணுமல்யாதொன்று மியார்க்குமிடர்செய்வார்
உண்ணுமற்கொலைகளவுக் கிறைச்சிமுதலானதுண்பர்

பொய்யுரைக்கவஞ்சார் போசனமுஞ்சாலவுண்பார்
மெய்யிற்சுசியில்லா ராட்சதக்கணமாகும்

அஞ்சார்சனிவழக்கு யாவரையுமேமருட்டி
வஞ்சனையில்வெல்வார் வலியாளையானாலும்

ராபகலுமாறாமல் நாரியர்தமைப்புணர்வார்
சாப்பாட்டொழுக்கமுடன் தம்முடம்புசுத்தியில்லார்

மாதலத்திலிந்த வன்னெஞ்சுடையவர்தான்
பூதகணம்பேய்க்கும் புறம்பாகுமென்றனரே

கொம்புளதுக்கைந்துமுழங் குதிரைக்குபத்துமுழம்
அன்பானயானைக்கோ ராயிரமுழத்தினப்பால்

வண்டிகண்டாலைந்துமுழ மப்பாலாந்துற்சனரை
கண்டவுடன்காதவழிக் கப்பாலேயோடகலம்

பாம்புமுதலானதற்குப் பல்லதனிலேவிஷமாம்
வீம்பானதேள்தனக்கு விஷமதுவும்வாலினிலே ௬௰

துற்சனரானவர்க்குத் தேகமெல்லாம்விஷங்கள்
மிச்சமென்றுசொல்லி விதித்தார்மனுநூலோர்

வேம்பிற்கசப்பும் மேவாமருக்கொழுந்திற்
சோம்பாமணமிரண்டுந் தோன்றும்போதுண்டான

வாறுபோல்துற்குணமும் வாய்ந்தபுகழ்சற்குணமும்
மீளாப்பிறப்பிலன்றி யிடையிலொன்றும்வாராது

நாய்க்குநல்லபோசனமும் நற்பணியுந்தான்பூட்டி
ஏற்கவேதண்டிகையி லேற்றிவைத்துப்போனாலும்

கண்ணின்மனுநரையக் கண்டவுடனேகுலைக்கும்
வண்ணம்போல்துற்சனற்கு வாராதுநற்குணந்தான்

எல்லாருந்தூஷணிக்க வெல்லாருங்கோணைப்போன்
பொல்லாதகாற்றிற் பிடித்தெரியுமக்கினியாம்

பொல்லாரைக்காண்பதுவும் பொல்லாற்சொற்கேட்பதுவும்
பொல்லோர்குணமுரைத்த போதிலேதீதாகும்

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்
கர்மியவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாது

தலங்கள்தனைத்துதியார் தர்மர்கதைகேளார்
துலங்குநதியாடார்சுவடிவாசித்தறியார்

வாசமிகுகீர்த்தியுள்ள மானிடசென்மங்களிலே
நீசப்பிறப்பிவரை நேத்திரத்திற்பார்க்கவொண்ணா

நிறை.

தங்கமுருக்கிடினுந் தன்னொளிவுமங்காது
சங்கதனைச்சுட்டாலுந் தன்னிறமும்போகாது

சந்தனத்தையுரைத்துச் சலத்திற்கரைத்திடினும்
விந்தையுறுமணமும் விட்டகன்றுபோகாது

சாணையிலேமாணிக்கந் தகர்த்துமிகத்தேய்த்தாலும்
காணுமொளிவுமொருக் காலுமதுமங்காது

பால்முறியக்காய்ந்தாலும் பண்புசுவைகுன்றாது
ஞாலமிதையிவ்வாறு நல்லோர்பெரியோர்க்கும்

ஆதாரமின்றியென்ன வாபத்துவந்தாலும்
நீதவழுவார்கள் நிறையுந்தவராரே

ஊரார்பொருள்மேலொருபோதுமாசைவையார்
பூராயமான புருஷோத்தமநிகராம்

தன்னுடையசெய்கையைப்போல் தானெவரையும்பார்ப்பார்
சின்னமொன்றுஞ்சொல்லாதார் தெய்வப்புருஷரென்பார்

சார்ந்தவரைக்காப்பவர்கள் தன்புருஷன்மேருவாம்
ஏய்ந்தமனமறிந்து ஈவோர்புருஷரத்னம்

வாராவறுமைமிக வந்தாலுமற்பர்களைப்
பாராரேசேரார் பண்பாம்புருஷசிங்கம்

தாய்தந்தையானாலுஞ் சமன்செய்தகோலதுபோல்
ஞாயமுரைப்போர்புருஷ நாயகமென்றேயுரைப்பார் சூடு

ஈகை.

ஆறுவற்றிலூற்றூறும் அண்டம்விளக்கிவருஞ்
சூரியனைராகுவந்து சூழ்ந்திடினும்வெய்யிலுண்டாம்

நல்லமதிதேய்ந்தாலும் நல்வெளிச்சங்கொஞ்சமுண்டு
கொல்லைபாழானாலுங் குருவிக்கிறையுமுண்டு

இவ்வகைபோலீவோருக் கேதிடர்கள்வந்தாலும்
எவ்வளவுமீவதல்லா லில்லையென்றுசொல்லாரும்

எடுக்கெடுக்கவூறு மிசைந்தமணற்கேணியைப்போல்
கொடுக்கக்கொடுக்கவல்லோ கூடும்பெருஞ்செல்வம்

வந்தவிருந்துக்களித்து வரும்விருந்துபார்த்திருக்கும்
சிந்தையுடையோர்கள் தேவரிலுமேயதிகம்

தாரித்திரத்தாற் றயவில்லாதம்மிடத்திற்
கூறினாலேதுங் கொடுக்காரிகழ்ச்சிசெய்வார்

ஈயுமுகாரனைத்தா னெப்போதும்வேணுமென்று
வாய்திறக்கவேண்டா மனதறிந்தேயீவானும்

ஈகைக்கிடையூறு.

தேனிடத்திலீயுமுண்டு ஜலத்தில்முதலையுண்டு
மானிலத்தின்வீடுகளி லண்டவிடாய்நாய்களுண்டு

சந்தனவிருட்சத்தி னடியிலேசர்ப்பமுண்டு
செந்தமிகுதாழம்பூ கிள்ளவென்றால்முள்ளுமுண்டு

கொடுக்குந்தியாகிகள்பால் கொடாமலிடையூறுசொல்லி
தடுக்குங்குலாமரங்கே தானுமுண்டேகண்டீரே ௬௬௰

குற்றமுறைத்துக் கொடுப்போர்தமைக்கெடுப்பார்
சுற்றமழிந்துடையுஞ் சோறுநஞ்சாகிவிடும்

சிநேகம்.

மதியிலுருமுயலு மதிவளர்ந்தால்வளருஞ்
சதிராகத்தேயுநாள் தானுமதுதேய்ந்திடுமாம்

வாவிதனிற்கோடிகளும் மந்நீர்போற்றாழ்ந்துயரும்
மாவிதஞ்சேர்புற்பூடும் வளருமதிலேமடியும

சேரும்பெரியோர் சிநேகமிவ்வாறுகுமென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்

சரீரசுகம்.

ஏற்றபுதன்சனியி லெண்ணெயிட்டேமுழுகி
காற்றுப்பனிவெய்யில் காயார்கள்மெய்வருந்தார்

ஓபாவழிநடக்கா ருண்டுபலகால்விரும்பார்
காயாகவுகிழங்கு கனியுமிகத்தின்னார்கள்

தன்வயதின்மேலான தையலுடனேசேரார்
உண்மைப்பசியன்றி யுணவுசற்றுமுண்ணார்கள்

மலநீரடக்கார்கள் மடப்பளியிலேயிருக்கார்
நலமாய்ப்பழங்கறியை நாடார்பலநாளும்

காய்ச்சுபால்நெய்மோரெக் காலமுந்தான்சேர்ப்பார்கள்
எச்சில்லாவழுக்கை யிளநீர்மிகுந்துண்பார்

ஆறுதிங்கட்கொருவிசைதா னனவிரேசனமுன்
நாரியனைமாதமொன்றிற் கிரண்டுவிசைபுல்குவரும் ௩௭௰

உண்டபின்புலாவி யுதகம்வருத்துவதும்
ரெண்டுபத்துரெண்டுமிந்த நெறியிலேயுள்ளார்தமக்கு

ஏர்க்குமுடல்தனிலே யெப்பிணியும்வாராது
தீர்க்காயிசுண்டாகும் சேமமென்றுசெப்பினரே

மாறுபாடில்லாமல் வயிரநிந்துண்பவர்க்கு
நூறுவரையுடலி நோயணுகமாட்டாதே

நோயணுகல்.

கல்லால்மயிராலுங் கடுகிடையாலும்
நெல்லாலுமியாலு நித்திரையில்லாதாலும்

ஒழியாவிசாரத்தா லுண்டபின்புழுழ்கையினல்
கழியுமலசலங்கள் கக்கிஷமாய்விழ்கையினல்

பின்னுமடக்குவதால் பெருத்தசுமைசுமத்தல்
மின்னாருடன்புணர்ச்சி மிகவும்விரும்புவதால்

மெய்யவனம்வேலையினல் வேர்வைபனிக்காற்றினல்
வெய்யவிளவெய்யில் விரும்பல்கனிவுணர்வு

ஏர்க்குக்கிழங்குசரு கிலேவிரும்பியுண்ணுவதால்
பார்க்குள்வியாதிவரும பாதையிதுவென்றுரைப்பார்

காலையிளம்வெய்யிற் காய்வோர்பிணமதனின்
மேலேவரும்புகைதன் மேலேபடுவோர்கள்

தன்வயதுக்கேமுத்த தையல்தனேப்புணர்வோர்
தன்மையுடனிரவில் தயிர்வார்த்தேயுண்பவர்கள் ௪௮௰

நால்வரிடந்தனிலே லட்சுமியில்லாளாம்
மேலுமவராயுள் விழலாகப்போகுமென்றா

இறந்துமிறவாதவர்.

பார்க்குள்விளங்கப் பலகர்மஞ்செய்தவர்கள்
மார்க்கமிகுகற்புடைய மாதைமணஞ்செய்தவர்கள்

தேவாலயமுதலாய்த் திருமடங்கள்கட்டினவர்
பூவானதுவிளங்கப் புனலாறுண்டாக்கினவர்

வரியோரிருக்க மனைகட்டிவைத்தவர்கள்
தரையாண்டநீதிமன்னர் சற்புத்திரரைப்பயின்றோர்

காவியஞ்செய்கவிஞர் கவிமாலைசூட்டினவர்
பூவுலகிலில்லாயாமல் பொருள்கொடுத்தமாந்தர்களும்

சீரானகோட்டரங்கள் செய்துமுடித்தவர்கள்
சூராதிசூரர் துலங்குபதின்மூவர்களும்

வாகாயிருந்தாலும் வையகத்திலூழிமட்டுஞ்
சாகாதபேர்சொற்கத் தலமீதுறைபவராம்

இருந்து மிறந்தவர்.

நெடுநாள்மருமன்மனை நீங்காதிருந்தவரும்
அடைவாய்வருமகன்று னம்மான்மனைதனிலே
சதமாயிருப்பவனும் தமிழறியாமூடருமே

இதமாய்க்கவிபாடி யிரக்கப்போம்வாணர்களும்
பொய்பேசிக்கடன்வாங்கிப் பிழைத்துதிரிபவரும்

மாறுவறுமையுற்றோர் வல்லமருந்துசெய்துந்
திராப்பிணியாளர் சிவிகைசுமந்தேபிழைப்போர்

மனைவிதனைவணங்கி வயிறுவளர்ப்பவரும்
நினைவுதடுமாறிசற்றும் நீங்காக்கவலையுற்றோர்

சொற்சோர்வுபட்டோருஞ் சொந்தமில்லாப்பொருட்கு
மிச்சமாய்பேசி வீண்வழக்குசெய்பவரும்

மனைவிதனக்கஞ்சி வந்தவிருந்துக்கொளிப்போர்
முனையானராசசபை மூடராய்ப்போனவரும்

ஈரேழுபேரு மெண்சாணுடல்படுத்தும்
சீர்கெட்டுயிரோடே செத்தப்பிணமாமவர்கள்

மருநீதிகாதல்.

சம்பத்துடன்பிணியில் தான்மெலிந்துவாழ்வதிலும்
துன்பமற்றேழையெடுத் துண்ணல்மிகவுநன்றாம்

ஆனதிருமா தகன்றுவருநமைந்தால்
ஞானம்போக்கல்வியும் ஃபாம நாடும்பழித்திடுமாம்

தாய்பழுதுசொல்வாள் சபையேறவெட்கமுமாங்
தூயமனையாளுந் துரும்பாய்மதித்திடுவாள்

மெய்சொன்னாற்பொய்யாகும் விசாரமுரம்போம்
உய்யவிருந்துவரி லுயிரோடேசெத்தபிணம்

மேன்மையறிவுகுலம் வித்தைநலமற்றுளதும்
போமேயிதற்கிசைந்து போவதுவேமெத்தநலம் எங

சேனைமருந்துசெய்யுந் தீராவியாதியுற்றால்
மானிலத்திற்றனாக மாளுவதேயுத்தமமாம்

பொருளின்பலன்.

பொருள்தேட துக்கமதைப் போற்றிவைக்கத்துக்கமதாம்
பொருளைச்செலவழிக்கப் போம்போதுந்துக்கமதாம்

காகத்தின்கூட்டில் கருங்குயில்கள்முட்டையிட
மோகமுடன்காகமுந்தான் முட்டையென்றேஎண்ணுதல்போல்

ஈய்கள்தேன்கூட்டி யெடுப்பாரிடங்கொடுத்து
போயலைகின்றதொரு புத்தியீனம்போலும்

சோரத்திற்பெற்றபிள்ளை சொந்தமென்றுமுத்தாடி
பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும

மயலாகத்தேடியே மண்ணிற்புதைத்தபொருள்
மயலாகபொருளுமலல வவன்பொருளுமல்லவென்பார்

உற்றபொருள்தேடமன மூற்றாலுலகமுமே
கற்றஞானிக்கு நாடேல்லாந்தன்னடிமை

பொன்னறியாமூடரிடம் பொருளதுவுஞ்சேர்ந்தாக்கால்
மன்னுக்குரங்கைப்பூ மாலைபோல்கொண்டலைவார

மன்னுங்குரங்கைப்பூ மாலைபோல்கொண்டலைவார
தேடுகின்றவல்லவர்க்குச் செம்பொன்னுருமசகம்

பொன்னாசையுள்ளவர்க்குப் போசனத்திலிச்சையில்லை
அன்னைசுற்றந்தர்ம மானதிலுமிச்சையில்லை எாய

வெட்கமில்லைபோகலாம் வேளையின்னதென்றுமில்லை
இக்குணமுள்ளோர்பேய்க் கிணையாகுமென்றனரே

பொருள்வகை.

மெத்தவுந்தானேகுவித்து வீட்டில்வைத்தநெல்லதனை
நித்தமெடுக்கிலந்த நெல்லுமற்றுபோவதுபோல்

ஏலநமக்கு மெழுத்தினளவாக்குஞ்
ஞாலமிசையிரவி நாழிகைபோல்நாளாகி

மாசவருடமென்று மாதத்துகையாகி
மோசமாய்க்கொல்லு முறைமையறியாமல்

இன்னநெடுநாளிருப்போ மிதுவேசதமென்று
பொன்னைமிகத்தேடிப் புதைத்துவைக்குமாந்தர்களை

சிதேவிபூதேவி சிரிப்பாரிவன்றேனியாம்
மூதேவிசென்மமென்று மொழிந்தார்மனுநூலோர்

மிக்கதர்மம்பொருளா மின்பமென்றமூன்றினிலே
நற்குணத்தால்தேடும்பொருள்நல்லயமுமின்பமுறும்

வஞ்சனையாய்த்தேடுபொருள் அத்தனையுமாகாது
மிஞ்சுபழிபகையா மென்பதனையுண்டாக்கும்

கூத்துபார்க்கவந்து கூடுஞ்சனம்போலும்
ஆற்றுக்கால்நீர்போ லைஸ்வரியங்கூடிவரும்

கூத்துமுடிந்தவுடன் கூடுஞ்சனங்கலைந்த
மாற்றம்போலாய்விடுமோ மைஸ்வரியமுள்ளதெல்லாம் எஉ௰

புண்ணியமெந்நாளும் புகழாகநிற்குமல்லால்
மண்ணினிலென்றைக்கும் வாழ்வுநிற்கமாட்டாது

நல்லறிவு கயவர்.

தன்னைப்புகழ்வோருக்தாய்தந்தையைப்பேணார்
அன்னைசுற்றம்விலக்கி யயலார்க்குதவுபவர்

மேலோர்சொற்கேளாதோர் வேசைசதமென்றிருப்போர்
பூலோகத்தோப்பனையைப் பொய்யென்றுரைப்பவருங்

கண்டாலுறவாடிக் காணவிடஞ்சலிப்போர்
கொண்டபெண்டாள்செய்யுங் குறையைவெளிச்சொல்பவரும்

பொய்சாட்சிசொல்வோர் போற்றிவைத்துப்பிச்சைகொள்வோர்
தையல்சொற்கேட்பதுவுஞ் சபையில்பயனில்லா

வார்த்தையுரைப்பவருமற்றுமிந்தபன்னிருவர்
பார்த்தால்மனுஷப் பதராம்பசாசிவரே

அக்கினியைக்கட்டலா மகலாநோய்தீர்த்திடலா
மிக்கதொருகஷ்ட மிருகமிணங்கிடலாம்

வல்லவிஷந்தீர்க்கலா மாண்டோர்க்குயிர்தரலாம்
வெல்லரியபேயனையு மிரட்டியேயோட்டிடலாம்

பறவைமிருகமபேசப் படிக்கவுமேசெய்திடலாம்
வரைப்போகவுஞ்செய்திடலாம் மறலிபிடதூதனையும்

மணலைக்கயிறாக்கி வைக்கலாங்கயவர்களின்
குணமதனைத்திருப்பக் கூடாதுகண்டீரே ௭௩௰

வெல்லமிகக்குவித்து வேம்பின்விதையைப்பதித்து
நல்லதொருபாலூற்றி நாளும்வளர்த்தாலும்

புல்லறிவுகயவர்.

சாதிகுணங்காட்டுந் தகைமைபோல்புல்லருக்கு
ஏதுரைத்துஞ்சற்குணங்க ளெள்ளளவும்வாராது

செல்வமதுவந்தவுடன் தெய்வந்தனைநினையார்
சொல்வரம்புசற்றுமிலை சுற்றந்தனைநோக்கார்

தர்மந்தனைநினையார் தக்கபழிக் கஞ்சார்கள்
கர்மியிவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாதே

உண்டென்றுநாளு முலகமுறைப்பதனை
இண்டுமிண்டாயில்லையென்று செப்புமவர்பேயெனலாம்

தோலெலும்புதின்னுநாய் சோறுநெய்யுமுண்டனக்கால்
சீலமுடனவயற்றிற் செரியாதவாறதுபோல்

சண்டாளரானவர்க்குத் தர்மநூலானதனை
விண்டாலவர்செவியில் வீழாதொருநாளும்

புலிக்கஞ்சியோர்வேடன் போய்மரத்திலேயேற
வனுக்குரங்குகண்டு வந்தவனையாதரிக்க்

ஞானிக்கிசுகமுமில்லை நாட்டிலோர்சாதியில்லை
ஈனமிலேச்சர்களுக்கு கெப்போதுநிரையுமில்லை

காமிக்கொருவரம்பு கருத்துமுறையுமில்லை
மாமிக்கயோகிக்கு வஞ்சர்வினையரில்லை
சத்தசுத்தபூசைக்குத் தானுமங்கசுத்தியில்லை
வித்தைபுகல்வாணருக்கு வேற்றுமைகளாருமில்லை

புல்லறிவு.

கள்ளருக்குற்றாருமில்லை கபடருக்குஞானமில்லை
எள்ளளவுந்துன்பங்க ளேதுசுத்தவீரனுக்கு
பொய்யனுக்குச்சாட்சியில்லை புலையருக்கிரக்கமில்லை
ஐயோவிரோதிக்கு ஆனதொருநேயரில்லை
தான்பிடித்தபிடியாய்ச் சாதிப்பவன்குரங்கு
ஆனசபையிற்குறிப்பு அறியாதான்பட்டமரம் ௭௬௰

எளியாருடனெதிர்ப்போனேற்றதடிநாயாம்
பழிபாவத்துக்கஞ்சான் பசாசாகுமென்றிடலாம்
வந்தோர்முகம்பாரான் வனத்திலிருக்குங்கரடி
பந்தமுறுசபையிற் பம்ப்போன்கிடாமாடு
அடுத்தோர்க்கிடர்விளைக்கு மவனேகொடுந்தேளாம்
பிடித்தபிடியைவிடப் புல்லன்வலிசாறை
சற்றெனினுங்கல்விகற்றுச் சபையிற்படிக்கறியான்
புத்தாம்விழுந்துபட்டுப் போனதொருகாட்டுமரம்
தன்புத்தியன்றிபிறர் சாற்றுபுத்திகேளாதான்
வன்புற்றுவானரமாம் வாய்பேசாவூமையென்பார்
அம்புவியையாளு மரசர்பகையைப்பெற்றோர்
கொம்பிழந்தமந்தி கூகையுறவானபட்சி
கொட்டுந்தேள்போல்தீராக் கோபமுடையவன்றான்
குட்டியிட்டநாய்கரடி கொடியவனமிருகம்
மருங்காய்ப்பெரியோரை வந்தனைகள்செய்யாதான்
கருங்கல்லிலேயடித்துக் கைகால்வகுத்தசிலை

பண்டிதாள் பரிட்சை.

முக்கியஞ்சேர் நூலின் முறையும்நிரையறிந்து
பக்குவமில்லாநாடிப் பரீட்சைதனையறிந்து

தேடியழைத்தபின்போய்த் தேகக்குணங்காலம்
பாடுகின்றநாடிகெட்டுப் பரீட்சைகளுந்தானறிந்து

சிந்தாதவாதபித்தச் சிலேற்பனத்தின்கூறறிந்து
வந்தபிணியும் வலுவுமிகத்தெரிந்து

கற்பங்கியாழங்கள் கனகுளிகைபற்பமுடன்
தக்கதொருசெந்தூரந் தயிலமுடன்சூரணமும்

இவ்வகையாய்லேகியமு மிதமறிந்துதான்கொடுத்து
அவ்வகையில்பத்தியமெத் தாகவேவழுவாமல்

எளிதானபத்தியத்தி லெப்பிணியும்நீக்குவித்து
தெளிவானவாரோக்ய ஸ்நானமிகச்செய்வித்து

தந்ததேபோதுமென்று தான்மகிழும்பண்டிதனை
சந்ததஞ்சேர்தேவர்பதி தன்வந்திரியெனலாம்

மிக்கபிணிவந்தால் வேணபொருள்தாரனென்று
மிச்சகுலதெய்வம்போல்மேன்மைமிகச்செய்வார்கள்

உற்றபிணிதீருமென் றுறுதிசொன்னலேகுருவாம்
சற்றேமருந்துசெய்யில் தந்தையென்றுசொல்வார்கள்

பாதிலகுவானல் பண்பிற்றமையனும்
பாதியுந்தீர்ந்துவிட்டாற் பரிகாசமைத்துனனும்

ஏதுபொருளானலு மீவதுமுன்னேயனும்
காதலுடன்மற்றநாள் கடனளியாவானே

அப்பாற்பகையாளி யாவர்கள்பண்டிதர்கள்
இப்படிசெய்லோப ரிருப்பாருலகினிலே

தீருதநோயருமை செப்பாதபொய்யரிடம்
வேரானபண்டிதனை மேல்மருந்துகேட்பவர்பால்

மூர்க்கரிடத்தினிலு மொய்குழலாப்பிரியா
நோக்குமவரிடத்தி லோபியர்கள்தம்மிடத்தில்

கத்ததுரோகியர்கள் கண்டதெல்லாமுண்போர்கள்
பத்தியத்தைதாழ்வுசெய்யும் பண்பில்லாமாந்தருந்தான்

மட்டில்லாப்பொன்னையள்ளி மாரியெனயீந்தாலும்
எட்டியடிவைப்ப தியல்பல்லபண்டிதற்கே

சுத்தம.

வெண்ணீருடன் துளசி வில்வமருச்சுகந்தம்
பண்ணும்புதுப்பாண்டம் பழவர்க்கங்காயிலைகள்

செந்நெல்கவசமுடன் செம்பிரும்புவெண்கலங்கள்
பொன்னுடன்வெள்ளிமுதல் பூணும்நவமணிகள்

கோதில்லாவெண்பட்டு கோடிதுகில்பாவும்
பாதரட்சையாவதுடன் பத்தொன்பதிவ்வகைகள்

கீழோர்பாலுற்றிடினுங் கீழோர்களீந்தாலும்
தாழ்வில்லாமேலவர்கள் தானிதனையேற்றிடலாம்

ஆசைமிஞ்சுமின்னு ரதரபானத்திற்கும்
பேசரியாப்பாலர்கள் போந்தசிறுநீரதற்கும்

வேட்டையிலேநாய்கடித்து விட்டிட்டமாமிசமுந்
தேட்டமுடன்பட்சிகள்தான் தின்றபழங்களுக்கும் ௭௯

இந்தவகைநாலுக்கு மெச்சிலிலையென்றுசொல்லி
முந்தமனுநூலின் முறையிலுரைத்தனரே

எத்தொழிலுமெக்கலமும் மிழிவுண்டேயல்லாது
சுத்தமதுவென்றவருஞ் சொல்லுதற்குநாவுளதோ

ஆகாமை.

மன்னர்பகையு மாதலத்தோர்தன்பகையும்
வின்னக்கொலைஞர் விகடப்ரசங்கிபகை

ஊரார்பகையு முற்றருடன்பகையும்
வீரானமந்திரிபகை மிகுந்தபணக்காரர்பகை

வல்லகணக்கர்கவி வாணர்குருபகையும்
வல்லமைசேர்பண்டிதர்கள் மந்திரவாதிபகை

பெற்றபிள்ளைபெண்சாதி பின்னவர்கள்முன்னவர்கள்
உற்றபதினைழி லொருபகையுமாகாதே

ஆறடுத்தவூறதுவு மாசரிடஞ்சேவகமும்
நீரில்விளையாட்டும் நீர்மிகுத்தபேராறும்

தாசியுறவுபிறர் தாரமின்னார்சேகமதுப்

தன்னேடிணங்குவதுஞ் சத்ராதிநட்பதுவும்
பன்னகத்தையாட்டுவதும் பகடுநடத்துவதும்
மெய்விளங்கும்போதினிலே மின்னருடன்புணர்ச்சி
மையிருளிலேதனித்து வழிபோகும்வல்லமையும் அள

நஞ்சுடனேதீமருந்தால் நாளும்பழகுவதும்
அஞ்சாமலெப்போது மலகைகளையோட்டுவதும்
ஆர்க்குங்கடலோட மதிலேதான்சஞ்சரித்தல்
பார்க்குமதுவுண்ணல் பலநாள்களவுசெய்தல்
இத்தகையாய்ச்சொன்ன திருபதையுமேமனதி
லுற்றுவிடறு முயிர்க்குலயமாமிதுவே
சாரார்பயிரிடுவோ ரில்லாளிரண்டுடையோர்
ஊரார்போம்பாதையந்த யோரம்பயிரிடுவோர்
பிணைப்பட்டுப்பொய்சாட்சி பேசுமிவர்நால்வர்களும்
சுணைகெட்டபேரிவர்கள் துன்பத்திற்குள்ளாவார்
சிற்றூர்குடியிருப்போர் சீர்கெட்டபெண்டுடையோர்
பெற்றபிள்ளையிற்றிரளாய்ப் பெண்ணாகப்பெற்றவரும்
அற்பனைச்சேவிப்பவரு மலக்கழிந்துபோவதல்லாற்
சொற்பச்சிலநாளில் தொந்தரைக்குள்ளாவார்கள்
அத்திக்காய்கோவைக்கா யைவிரலிதேற்றன்காய்
சுத்தவெள்ளைக்கத்தரிக்காய் சோற்றுக்காந்தலிவைகள்
தின்பார்களொருநாளுந் தேவபக்தியில்லையென்று
முன்பாகநூலோர் மொழிந்தார்மனுநூலில்
துறந்தோரடங்காதார் துன்னிபிணியோர்களையும்
புறம்பேசும்வஞ்சகர்கள் பின்னவர்கள்பெண்டுகளும் அளய

கல்லாலவன்நெஞ்சிற் காணுமிவுரெண்மறையும்
நல்லசபையிலொரு நாளும்வைத்துப்பேசவொண்ணு
ஆசனங்கள்தான்போடி லாயிசிதுவிர்த்தியில்லை
போசனமுந்தான்சமைத்தால் போமேஅயிஸ்வரியம்
தனக்கெண்ணெய்தான்கேத்தாற் சந்ததிகட்காகாது
அணர்த்தமிதுமுன்றென றருளினர்முன்னோர்கள்
யோகியொருபோதே யுண்பானிருபோது
போகியுண்பான்மூன்று வேளையுண்பான்வியாதியஸ்தன்

உடனொருநான்குபோ துண்ணுமவன்றனக்கு
இடையூறுண்டாகுமென் றியம்பினார்முன்னோர்கள்
வீரத்திலொப்பில்லா விக்ரமனேயானாலும்
வீரியமும்வாறும் விளம்பிடவுமாகாது
வேந்தர்குருபொய்யர் மேன்மையுள்ளோர்கோபிகட்கும்
வாய்ந்தகடன்கொடுத்து வாங்குவதுநீதியல்ல
நாட்டுக்காகாதவரை நயக்கடங்காப்பெண்டீரை
மீட்டுமந்தராசனுக்கு மேலானமந்திரியை
துற்சனர்சினேகமதை தொட்டாவசையும்பல்லு
இட்சணமேயைந்து மெடுத்துவிடவேணுமென்பார்
கடன்பட்டுத்தரித்தோர் கைச்சீட்டிலேசேஷம்
விடந்தீண்டிமீண்டதிலே யெவ்வளவுமேசேஷம் ௮௨௰

அக்கினியில்வெந்த வுகந்தனிலேசேஷம்
மிக்கானசத்துருவை வெல்லுவதிலேசேஷம்
தெய்வப்பிரார்த்தனைகள் செய்துமதில்சேஷம்
உய்யப்பிணிமருந் துண்டதிலேபின்சேஷம்
வாணிபோய்மீண்டதிலே கடுகளவுசேஷமுடன்
ஆணியாம்பத்து மணுவும்வைக்கலாகாது

பலனில்லாமை.

சந்திரனில்லாவானஞ் சற்சனரில்லாதவூர்
மந்திரியில்லாவாசல் மதகரியில்லாவெம்போர்
மக்களில்லாச்செல்வ மதுரமில்லாதகவி
தக்கதினபதிகள் தானில்லாவெஞ்சேனை
பெண்ணுரில்லாதமனை பிறவியில்லாதவுடல்
விண்ணுணப்பாடல் வினையமில்லாமேல்சி
கோப்பில்லாக்கூத்துடனே கொங்கையில்லாபெண்ணழகும்
தாப்பில்லாச்சிவனங்கள் தந்திகளில்லாவீணை
பத்தியில்லாப்பூசை பார்த்திபரில்லாதபுரம்
சத்தியமில்லாதவாய் தானறியாவாணிபங்கள்
சந்தமில்லாப்பாட லுதாரணஞ்சொல்லாதகவி
நந்தாப்புனல்சேர் நதிவளமில்லாநாடு

தேசிகனில்லாவித்தை தியானமதில்லாதிட்சை
பேசரியநல்லறிஞர் பெரியோரிலாதசபை ௮௩௰

குடிநலமில்லாநாடு குணமில்லாப்பெண்ணுசை
வடிவுற்றுவாசமில்லா வானமிருமலரும்
சேகரமில்லாக்கதை தீபமில்லாதமனை
சூகரம்போலுண்ணுகின்ற சுசியில்லாப்போசனமும்
கல்வியில்லாத்தேகங் கற்பனையில்லாதகவி
வல்லவிவ்வெண்ணுன்கில் வரும்பயன்களொன்றுமில்லை
தந்ததேபோதுமென்று தான்வாங்காவேதியனும்
வந்ததேபோதுமென்று வாங்குகின்றராசாவும்
வெட்கத்துக்கஞ்சுகின்ற வேசையரும்வெட்கமில்லை
மிக்ககுலப்பெண்டீர் மேன்மையில்லைகஷ்டம்வரும்
அன்னைசிறந்தாலுண வானதெலாம்நட்டமாம்
பின்னைப்பிதாவிறந்தாற் பேரானவித்தைநட்டம்
உற்றதுணையிறந்தா லுடலிலேபாதிகஷ்டம்
மற்றுமனையா லன்றுதலைபோனதென்பார்
பருவம்போய்ப்பாபம் பண்ணுவிக்கும்விந்தைகளும்
பெரியகிழவனுக்குப் பெண்டிளமைப்பெண்ணுளும்
அத்தரித்திருக் கழகுடையபெண்டீரும்
இத்தன்மைமூன்றினு மெய்தும்பலனிலையே
வாரியிலேபெய்ந்தமழை வயிறுபசியில்லாத
பேர்களுக்குப்போடுஞ்சோர் பிசாசக்கிடும்பூசை ௮௪௰

பொன்னுள்ளோர்க்கீய்ந்தபொருள் போதவிந்நான்கினிலும்
என்னபலனுமில்லை என்றனரேமுந்நூலோர்
அந்தணர்க்குமாவார்க்கும் ஆபத்திலேயுதவார்
இந்தவுலகி லிருந்தென்னிறந்துமென்ன
யார்க்குமுறைபாதவித்தை யனேகவிதமாகிப்
பார்க்குள்படித்தென்ன படியாதிருந்துமென்ன
என்னகறிசுவைக ளினிதாயிருந்தாலும்
பின்னுமதில்நெய்யில்லாப் போசனமுந்திருப்தியல்ல
தன்னூல்நிருவகிக்கத் நகாதவிரதமுற்றால்
என்னபல [illegible]

தருணமறிந்துதவாத் தன்மைசேர்நண்பாளர்
அருமையாய்ப்பின்னு னுதவியுதவாமலென்ன

வாலிபத்திலெய்தாத வடிவுடையபெண்ணாளும்
சாலவிர்த்தாப்பியத்திற் சார்ந்தென்னநீங்கிலென்ன

புருஷனில்லாவிதவை பொன்னுடையாபரணம்
வரிசையுடனணிந்தால் வையகத்தோரேசுவார்

பெற்றதாயில்லாத பிள்ளைதனையெவ்வாறு
வைத்துவளர்த்தாலும் வளங்கொடுக்கமாட்டாது

பல்லில்லாதோருமற்றப் பசியுள்ளோரானவரும்
நல்லருசிகாணுரென்று நவின்றார்மனுநூலோர் ௮௫௰

தெய்வதவங்குருமுறையுந் திருஞானசாஸ்திரமும்
வையகத்திலேமருந்து மந்திரமோடிவ்வைந்தும்

மெய்யென்றுரைப்பவற்கு மெய்யாய்விளங்கிநிற்கும்
பொய்யென்றுரைத்தாக்காற் பொய்யாகிப்போய்விடுமே

பாடுபடாமற் பலன்கொடுக்குநற்பனைபோல்
நாடிக்கொடுப்பதுவே நன்றுகுமுத்தமமாம்

சிலதுநாள்பாடுபட்டால் தென்னைமரம்பின்பு
பலந்தருதலபோல்கொடுக்கும் பண்பதுவேமத்திமமாம்

வருடமெலாம்பாடுபட்டால் வாழையொருவிசைதான்
தருமபலன்போல்கொடுக்குந் தர்மமுமேயதர்மமுமாம்

தெண்டனையில்லாவேலை சேயரில்லாமனைவி
கொண்டவர்க்குளடங்காக் கொம்பனையாலிவ்வாழ்க்கை

வண்டரிணக்கம் வறுமைதனிற்சேர்க்கும்
மண்டலத்திலிவ்வைந்தும் வளந்தரவுமாட்டாதே

மாரிகாணுதபயிர் மக்களில்லாயில்வாழ்க்கை
ஏறிகுளமில்லாவூ ரிரவிகாணுவசனம்

அன்னைகாணுதபிள்ளை ஆவினைக்காணுதகன்று
பொன்னில்லாப்பூஷணங்கள் போசனமுண்ணுதவுடல்

காவுகாணுதவண்டு கலைகள்காணுக்குமரன்
மேவுகொழுனனில்லா மெல்லியர்களானவரும்

தோழர்காணுனேசர் சோடுகொணுப்பெடு
பீளுமதிகாணுக வெண்குமுதமானதாவும்
பெரியோரில்லாதசபை பெண்கள்தனில்மூத்தாள்
உரியதியாகியில்லா வூர்பதினேழாமிவைகள் ௮௯௰

தாழ்வுதருமல்லாது சாக்தவளமாகாது
வாழ்வுகாணுவிளமை வாருகுமென்றிடுவர்
நல்லோர்க்குச்செய்தநன்றி காட்டிவைத்தகையெழுத்தாம்
பொல்லார்க்குச்செய்தநன்றி பொய்கையுறும்நீரெழுத்தாம்
சுற்றமூண்ணுயில்வாழ்வுஞ் சுதியில்லான்பாடுவதும்
கற்றறியானபாடுகவி கைம்பெண்ணிலேயழகும்
துற்குணப்பெண்சாதி சொற்கேளாதவடிமை
மிக்கவிவையாறும் வீணும்பலனில்லையே
ஊமைசெவிடருக் குரைத்தவுபதேசம்
சேமமென்றுபாவிகட்குச் செய்தவுபகாரம்
மேலுமூவர்நிலத்தில் விதைத்ததொருநல்வித்தையும்
சாலயிவைமூன்றுற்றுத் தண்ணீர்களைத்தபுளி
குதிரைக்கிரவுத்தன் கூறுகவிப்புலவன்
கதிரானவாயுதங்கள் தனக்குச்சிலம்பியுமாம்
வேசைக்குநட்டுவனும் விளங்குபலராகமதற்
காசையாய்ப்பாடுவனு மைவருந்தானில்லாவிட்டால்
எத்தமுடன்மதிலி லெழுதிவைத்தபெண்ணழகைப்
பார்த்துமகிழ்ந்துபோம் பண்பாம்பலனில்லையே
தேவாலயஞ்சுற்றித் திரும்பாததாள்தாளோ
தேவதரிசனங்கள் செய்யாதகண்கள்கண்ணோ ௮௱௭

பகவான்தியானமதைப் பண்ணுதசிந்தையென்ன
ஜெகமீதுபகவானைச் சேவியாச்செங்கையென்ன
சிவன்மாலையுந்திதிகள் செய்யாதவாயென்ன
சிவன்மாலையும்வணங்காச் சென்னியுமேசென்னியதோ
தினமும்புராணகதை கேளாததென்னசெவி
முனையானபுண்யநதி மூழ்காததென்னவுடல்
மேவுமிவையெட்டு மில்லாதோன்பாழ்செனனம்
பாவியிவனிருந்தும் பலனில்லைவீண்பிறப்பாம்

ஞானமறிதல்கொடை யாளிதனவானாய்
ஆன்றொருபூவலஞ்செய் வானாகிவிவேகியுமாய்

மிக்கதொருவித்துவான் விளங்குகின்றகீர்த்தியவான்
உக்ராணவிர னுபகாரியாவருக்கும்

இவ்வகையிலோர்பே ரெடுக்காதசென்மமவன்
இவ்வுலகிலேமனித னெனறவனைச்சொல்லவொண்ணா

சீர்படைத்தவோர்மனுஷச் சென்மமொருயோசனைக்குள்
பேரெடுக்காப்பேர்மனுஷப் பிறப்பிற்கழுதையுமாம்

லோபத்தனம்.

தேன்றுளியொன்றாற்கடலைத் தித்திக்கச்செய்தாலு
மேன்மையுடன்மலையை மெழுகாகச்செய்தாலும்

பூவினால்வச்சிரத்தைப் பேர்த்துதுளைத்தாலும்
மேவுங்கபடருக்கு மெய்ஞ்ஞானம்வந்தாலும் ௮௮௰

ஊமைபடித்திடினு மூர்க்கமிலாப்பேடிக்கு
தாமேதான்வீர்ய தைரியமுண்டாயிடினும்

நித்தங்கயவருக்கு நீதிமுறைவந்தாலும்
இத்தலத்திலோபர்களுக் கீகைசற்றும்வாராதே

தின்னாமலுண்ணாமற் றேடிமிகச்சேர்த்து
புண்ணியமுஞ்செய்யாமற் புதைத்துவைக்கும்லுத்தர்பொருள்
தெண்டம்பெறும்பிடிக்கும் தீக்குந்திருடருக்கும்
வண்டமனைவேசைகட்கும் வலுவந்தகாரருக்கும்
இதமில்லாப்பேடிகட்கு மெல்லாப்பிசாசுகட்கும்
உதவுமேஈயா வுலுத்தர்பொருள்துதான்
ஆகாப்பதரெனிலு மரியவிபூதியைவிளக்கும்
வாகாப்பழஞ்சுவரும் மாடுறைஞ்சுமுள்மறமாம்
மாடுகெடாவதுவும் வையகத்திலேயுழவர்ம்
கூடப்பொதிசுமக்குங் கூடிவருமேயதனால்
செத்தபிணமானாலுஞ் சிறிதுவுபகாரமுண்டு
புற்றதுவுமண்ணாகும் பொங்கரவுக்கேமனையால்
கல்லாலேயாலயங்கள் கனத்தபணதியுண்டு
அல்லற்கழுதையென்று லழுக்குப்பொதிசுமக்கும்

வாறுகோலானாலு மாளிகையெலாம்விளக்கும்
பேருய்க்குரங்கு பிடித்தாகுதவிசெய்யும்
ஈயாதலோபிகளா லெவர்க்குமுபகாரம்
வாயாதவர்கொடுக்க மாட்டாரொருநாளும்
நெல்லின்பதரென்ன நீரினிலேபாசியென்ன
நல்லமரத்தில்மொக்கு நன்றாயிருந்துமென்ன
சீதேவியாருடனே சீர்கேடியானதொரு
மூதேவிதான்பிறந்து முக்கியமுண்டோவதனால்
தயவாயொருவயற்றில் சார்ந்தவிவேகியுடன்
கயவர்பிறந்துமென்ன காரியமெல்லாஞ்சிதையும்
உச்சிதமாயார்க்குமுதவில்லாதார்வாழ்க்கை
நச்சுமரம்பழுத்து நடுஊரில்நிற்பதொக்கும்
செத்தபிணமதனைச் சிங்காரித்தாவதென்ன
கைத்தலத்தினாலிழுத்து காட்டிலேபோட்டுமென்ன
நாயானதுகொழுத்தால் நாட்டிலதையார்புசிப்பார்
ஈயாதலோபியற்கு எல்லாமிருந்துமென்ன
ஈயாதயில்மாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிருக மதனிலேசேர்க்கவென்றார்

இகழ்ச்சியீனம்.

கற்பனையில்லாத கவிதனையேகேட்பதுவும்
விற்பனமில்லாரிடத்தில் வேண்டுங்கொடைபலவும்
ஆதரவில்லாதபெண்டீ ரருமையில்லாசேவகமும்
பேதமின்றிப்போவிளங்காப் பிள்ளைதனைபெற்றதுவும் ௯௱

ஊழிவினையு முதிர்கொடுமையல்லாமல்
வாழ்வல்லவீனாந்தும் வசையாகுங்கண்டீரே
நீர்நுழையாவிடத்தில் நெய்நுழையும்நெய்நுழையாச்
சார்பிலேபால்நுழையுந் தானதுபோகாவிடத்தில்
மீறிப்புகைநுழையும் வெம்புகைபோகாவிடத்தில்
தாரித்திரனுமது தன்னில்நுழைவானாம்
தக்கதராதரங்கள் தானறியாப்பேரிடத்தில்
ஒக்கவிருந்துண்பதினு மோவெடுத்திரத்தல்நன்று

தூயவறிவில்லாச் சுதனைப்பெருவதிலும்
பேய்தனைப்பிள்ளையாய்ப் பெற்றுவளர்த்தல்நன்று
உள்ளன்பில்லார்களுடனட்புக்கொள்வதிலும்
கள்ளுண்ணும்வம்பர் கழுதைகளைமேய்த்தல்நன்று

வெளிவிடக்கூடாதவை.

ஆசானுபதேச மரிவையர்கள்புணர்ச்சி
மாசானசோரம் மனதடக்கமுற்றபொருள்
மானம்பிறர்மான மறந்துடனேதான்கொடுத்தல்
தானுமகத்திருக்குந் தானத்தினன்வினையும்
இல்லறத்தின்கேவலர்கள் யாவரிடமீதுபத்துஞ்
சொல்லவொண்ணாதீனமென்று சொன்னார்மநுநூலோர்
தன்னகத்தாளன்றுமறு தாரமேலாசையுற்றால்
பின்னொருவர்தாரமது பெண்டுணாச்சேராரோ கூாய

பறையன்பறையநல்ல பகர்ந்தமொழிதப்பிதமாய்
யறைவோன்பறையனென்று பகர்ந்தாரேமுன்னூலோர்
ஞானமுஞ்சற்குணமு நாணுமில்லான்கற்றகல்வி
ஈனப்பறையர்வீட்டி லிருக்குங்கங்காசலமாம்
தண்ணீர்தன்மை தனையுவற்றினாலழியும்
பெண்ணோர்கள்தன்மை பிறர்கமலத்தாலழியும்
கோதில்லாமாதவசு கோபத்தினாலழியும்
வேதகுலதன்மை விபசாரத்தாலழியும்
மன்னவர்கள்தன்மை மனுநீதியாலழியும்
இந்நிலத்திலுத்தமர்கள் யாவர்களுஞ்செய்தநன்றி
பொல்லாததன்னகத்துப் பெண்ணாலழியுமென்று
வல்லோர்கள்முன்னால் மனுநூலுரைத்தனரே
பருவதமும்பார்க்கடலும் பார்வதியும்லட்சுமியும்
அரிதாய்ப்பிறந்திடத்தி லரியானும்வாழ்வதுபோல்
பூமியிலேதங்கள்மனைப் பெண்ணுள்பிறந்தவிட
மாமியார்வீடே வளமென்றுரைப்பார்கள்

மீ க.டு.

காவலர்களாணை கெடுப்பதுவுமேயடங்கா
நாவுமிகுகோபமுட னமதுரைகேளாவுடை

ஆதாயமின்றி யதிகச்செலவுகளும்
காதாரக்கேளாச்சொல் கவியிலமிச்சங்கண்டெழுதும்

சாட்சிமிஞ்சும்வழக்குந் தயிரியமிஞ்சுங்கவலை
பேச்சில்சரசமிஞ்சிப் பேசுபரிகாசமுமாம்

பத்தாவின்சொற்கடங்காப் பாவைதனைப்பெண்டாக
வைத்தான்படுந்துக்க மதனைவிட துனபமுமாம்

ஓவிகாரமா யுயர்ந்தோற்குச்சொன்னவர்கள்
ஊரழியுமேசுமக்க உலகமதுநடுங்கும்

உப்பிட்டபாண்டமிலை யுதிர்ந்தமரம்போலாம்
ஒப்பில்லாவாழ்வும்போ முற்றூர்பெற்றூர்பாழாம்

மாதேவியான மலர்மாதகன்றிடுவாள்
மூதேவிசேர்வள் முடுவில்நரகமெய்தும்

என்னேரஞ்சண்டையு மட்டில்லாச்சிரிப்பதுவும்
சின்னஞ்சிரியாரிணக்கந் தீராக்கொடுங்கெர்வம்

வேசையுறவும் விவேகமில்லாரிடத்தில்
ஆசாராய்ச்சேவகங்க ளாறுமிவைகேடெய்தும்

தேடாப்பொருளழித்தல் தீராதகோபமரண்டும்
கேடாய்முடியுமல்லால் கீர்த்திசற்றும்வாராதே

ஞானந்தனங்கல்வி நாடிவருங்கால்
மானோர்மேலாசைதரும் வாழ்வும்போந்துக்கமுமாம்

என்னன்றியைமறந்தார்க் கெவ்வாறுமுடிவுண்டாம்
மனமறிந்துசெய்நன்றி மறந்தார்க்கிடேற்றமில்லை

இமிசைப்பட்டாற்று தேழையழுதகண்ணீர்
வமிசத்தைதேய்க்கு மாமுங்கூர்வாளென்னதால்

தீங்கானவாங்காரஞ் செல்லுமிடமானதன்றித்
தாங்காவிடஞ்செலுத்தல் தப்பாமற்கேடுவரும்

தாழ்ந்தாருயர்ந்தார் சறியாமெனவறிவால்
ஆய்ந்துமரியாதைசெய்யா தாராகிற்கேடுவரும்

சரியானபேரையன்றித் தன்னிலதிகபல
பெரியோருடனெதிர்த்தாற் பிராணபயமுண்டாகும்

இத்தலத்தில்யாரொருவர்க் கென்னாளுமுற்பாதம்
புத்தப்பிரதானமாய் பொல்லாங்குசெய்வார்கள்

புத்திரர்களில்லாமற் போவதுவுமல்லாமல்
அர்த்ததரித்திரர் யற்பாயுசாவர்கள்

ஏர்க்கையுடனிவமு யேதேதுகாரியமுந்
தீர்க்கவிசாரணைகள் செய்யாரேயாமாகில்

பின்னாலேதுன்பம் பிணக்குமிகவுண்டாகும்
அந்நாளேகிரியினா லேந்துகுடிக்கெட்டதொக்கும்

சத்ராதிசொல்லைத் தந்தாய்நினைப்பவரும்
உற்றமனையாட்டிக் குண்மையுரைப்பவரும்

கொடுத்தகடன்கேட்டாற் கோபங்களுற்றவரும்
எடுப்பாய்பெரியோரை யெண்ணாமற் பேசினவர் ௯௪௰

பெரியதனம்வந்தவுடன் பின்முன்னும்பாராமல்
இருவிழியாற்சற்று மேரிட்டுபாராதார்

இனியபரிதானத்தி லிச்சைவைத்தேயொருவர்க்
கனியாயஞ்செய்துபொல்லா வவதிவரச்செய்குவர்கள்

பாரிதனைவிட்டுப் பரத்தைமேலாசைவைத்த
பேரெழுவருங்கெடுவர் பேய்காய்ப்பிறப்பாகும்

கூடிப்பிரிவதனால் கொடியசூதாடுகையாற்
கேடுவருமிதற்குக் கெணிதமில்லையென்றனரே

கண்ணினாற்காண்பதுவுங் காதினாற்கேட்பதுவுந்
திண்ணமுடன்முன்பின்னாய்ச் செப்பினாற்கேடுவரும்

வித்தமகன்மைஸ்வரிய மேதங்கிளைகூட்ட
மற்றும்பயருழியி னாலுமகிட்சியினால்

ஏர்க்குமெளியோர்கள்முதல் யாவரையுந்தூஷணித்தல்
தீர்க்கமிடிகேடுவரும் திண்ணவனார்வள்ளுவனார்

நெஞ்சிற்பயமதுதா னேரிடயாவரையும்
அஞ்சவஞ்சச்செய்தா லவர்கட்குமேகேடுவரும்

தினையளவுநன்றிமுன்னஞ் செய்தாரேயாமாகில்
அணுப்போதிலுமறக்க லாகாதுதான்மறந்தால்

அந்தணர்க்குங்கோவுகட்கு மடாதுபொல்லாங்குசெய்த
நிந்தனையும்வந்தவர்க்கு நேரிடுமென்றேயுரைத்தார் ௧௫௰

ஆவலுடன்தன்பிழைப்புக் காகாவொருவருக்குத்
தீவினைகளெவ்வளவுஞ் செய்வாரேயாமாகில்

நீண்டதொருதனமிழல்தா னின்றடியிலாவதுபோல்
ஆண்டுநூறானாலு மவரைவிட்டுப்போகாது

முன்னிலதிக மிடிமையதுவுண்டாகும
பின்னாலேழுமேழ் பிறப்பு மவிடப்போகாது

செய்ததொருதீவினைதான் செய்தவாகவெகப்போது
மெய்துமெனறுசொல்லி விளம்பினார்வள்ளுவரும்

அரிது.

அரிதரிதுயாணிடர்க ளாகப்பிறப்பதுதான்
உரியதொருகூன்குருடு ஊமைசெவிடுபேடும்

நீக்கிப்பிறக்கரிது நோய்ப்பிறந்தாலும்
தீர்க்கமுற்றறுஞ் சிறந்தகல்விநற்குணங்கள்

வாராகரிதரிது வந்தாலுந்தானதர்மம்
நோய்த்தரிககிறது செளுசிற்றரித்தாக்கால்

நீணிலத்திற்குன்றுமல் நெடுநாளும்வாழ்வுபெற்று
வானவர்கோனறனபதமும் வருமெனறுரைத்தனரே

இனிது.

இனிதினிதுவேதாந்த மினிதினிதாமன்பருள்ளம்
இனிதினிதுகாணுங்கண் மேணதுங்கேளாச்செவியே

கொடிது.

கொடிதுகொடிதென்பதுதான் குவலயத்திலேவறுமை
இடருமதிற்கொடிது இளமைதனிலேவறுமை ௧௬௰

அதிற்கொடியதாமருந்தி லகலாதவெவ்வியநோய்
அதனிற்பெருங்கொடிது அன்பில்லாத்தம்பியுமாம்

அதனில்மகாகொடிது அடங்காதபெண்சாதி
அதனிற்கொடிதுண் டவளோடுறங்குவதே

பெரிது.

பெரிதுபெரிதிந்தப் பேருலகஞான்முகன்றன்
வரிசையப்பண்டப்பாகு மவன்மால்வயிற்றுதித்தோன்

மாலோகடல்துயின்றான் வாரிகுருமுனிவன்
பாலெடுக்கமாமுனிவன் பண்டொடுக்கங்கும்பமதில்

கும்பமோபூமியதிற் குள்ளாம்பொடிமண்ணும்
தம்பமொருபூமியாந் தலைப்பாரஞ்சேடனுக்கு

சேடனுமையாள் சிறுவிரலினாழியாம்
ஈடில்லாதவுமையா ளிறையவர்க்குள்ளொடுக்கம்

தொண்டரிதயத் தொடுக்கமிறைவன்றான்
தொண்டர்பெருமைதனைச் சொல்லமுடியாததுவாம்

முக்கியமுள்ளது.

தலத்தினிற்சிதம்பரமாந் தாருவினிற்சந்தானம்
பலத்திலேமாருதமாம் பிரணவமாமந்திரத்தில்

வேதத்தில்சாமம் விரதமேகாதசியாம்
மாதத்தில்மார்கழியா மலைதனிலேமாமேரு

நிலத்திலேகாஸ்மீரம் ரிஷிகளிலேவசிஷ்டர்
குலத்தில்மறையோராங் குதிரையிலுச்சிரவணமாம்

வாரத்திலாதித்த வாரமங்ககான்மீனில்
பேருற்றவாதிரையாம் பெருமுனியில்நாரதனும்

தனத்திற்குபேரன் தானமேதானமுமாம்
மனுக்களிலேராசாக்கள் வாரியிலேபார்க்கடலாம்

மோகத்திற்புட்கரமாம் விலங்குகளிற்சிங்கமுமாம்
யாகந்தனிற்சிரேஷ்ட பச்சுவமேதமென்பார்

மாமணியில்மாணிக்க மலரிலேபத்மமலர்
காமதேனுபசுவில் கங்கைநதியாம்நதியில்

தமிழிலகத்தியராந் தந்தியிலைராவதமாந்
தமனியமாமலோகத்தில் தானியத்திற்செந்நெல்லாம்

பட்சிகளிலேயுவணம் பாம்பிலேவாசுகியாம்
மச்சத்திலேமகரம வடிவதனிலோதியாம்

கற்பிலருந்ததியாங் கபிலராஞ்சித்தர்களில்
செப்புகின்றவாக்கில் ஸ்ரீராமச்சந்திரனும்

அசுரர்குலத்திற்பிரக லாதனனேயுத்தமனும்
வசியமுறுபடையில் வச்சிராயுதமாகும்

மருநீதிகாதல்.

சங்கீதத்திம்பாஞ்சசன்யஞ் சந்திரனுங்கிரகத்தில்
சங்கும்பதவியிலே சாயுச்சியமாகும்

போகத்திலிந்திரனும் புஷ்பகமவர்மனத்தில்
வாகொத்தவில்விறத்தின் வாழ்விலேமைந்தர்களாம் ௬௮௰

உடையிலேபட்டாடை யுத்தியிலேயூகிமந்திரி
கொடையிலேதான்கர்னன் குணமூன்றில்சாத்மீகம்

மன்னும்புராணத்தில் மாபாரதமாகும்
துன்னுஞ்சுடரொளியில் சூரியனேமேலொளியாம்

ஆடுமீனிராறி லதகந்துலாமாகும்
வாடாதநுண்ணியநூல் வள்ளுவனற்சொற்குறளாம்

சுவையாரிலேலவணந் துணைவரிலிலக்குமணன்
சிவமணியிலக்குவடந் தேசத்திலசோழதேசம்

பொறுமையிலேபூதேவி போரிலேராவணனும்
திருமாலாம்ராகவனுஞ் செய்தபோதேயதிகம்

ஓசையிலடியேறு ஊரில்யோக்கியதாம்
ராசரிலேராசாதி ராஜனுமவிக்கிரமன்

அன்பாகச்சொன்னவிந்த வறுபத்துநான்குமே
மூன்பாமுதன்மையென்று முன்னோர்மொழிந்தனரே

கொடுமைபாலழித்தல்.

தக்கனிரணியனுஞ் சக்கிரவர்த்தியாம்ஙிதியும்
மிக்கானவாகுலங்கள் மேனாளிலேநகுலன்

பந்தமுறுகின்றசிசு பாலனறுவர்களும்
சிந்தனையினாலே நீர்மூலமானார்கள்

கஞ்சன்துரியோதனனுங் காளமுனிவஞ்சகுனி
வஞ்சகஞ்செய்வாதாவி மாரீசனுங்கலந்தன் ௬௯௰

பூதகியசோமுகியும் பொல்லாதசூர்ப்பனகி
வாதுபுரிந்தந்த வக்கிரனுமென்பவனும்

சகனுடன்வில்வலனுஞ் சலேந்திரமகாசூரன்
விகடன்பிரலம்பன் மேனாளதாசூரன்

பிஞ்சுகொடியோரா மிவர்கள்பதினெழுவர்
வஞ்சகத்தினாலிவர்கள் வம்மிசத்தோடேயழிந்தார்

சூரனுடன்தாருகனுந் தர்ப்பானுகோபனுடன்
சிரமிகுசிங்கமுகன் மின்னுளசோமுகியும்

நியாமங்கத் திரிபுரானவரும்
மாயமனுகைடவர்கள் மாபாவிதுந்துபியும்

மாலிசுமாலியுடன் மகிடாசூரன்சம்பரம்
காலகேயநிவாத கவசருடன்தாடகையும்

இடும்பன்பகாசூர னிரணியாட்சதனென்போன்
கடுங்கோபச்சதரான் காலகதியாலழிந்தார்

தாசியங்கம்.

புருவநெறியாமல்விழி புரளாமலேவெளியில்
தெரியாமலேயங்கச் சேட்டைகளுஞ்செய்யாமல்

அனுவளவுந்தலையை யசைக்காமலேமிடறு
தனில்பொருளாமல்சுருதி தந்நிலைக்கியானம்

நீதியாய்த்தொனிவீணை நேராயநிற்றந்தி
காதமிட்டேப்பூசை ரஞ்செஞ்சரிபாகம்

அமுர்தரசதானி யாய்மதுரசங்கீதம்
காமரசமாய்ப்பாடுமவள் தாசிமகள்தாசியென்பார்

காயமேல்விழிபுருயர் கண்மேல்மனமும்வைத்துக்
காயலயிபெமுங் காட்டுமவளேபாதம்

பாதாளக்சுருதியங்கம் பாங்காகவேசெய்து
வாதானஞ்செய்பவளே மத்தடியாமென்றிடலாம்

பலராகதீதங்கள் பாங்கானதானங்கள்
கலமாகப்பாடுமவள் கல்லதொருபாடகளும்

தானத்திலேவினைவு தரித்துநடனமிடும்
வாரூற்றசற்பாத்ர மதிவானகட்டுவனும்

தாளையமார்க்கங் தப்பாமலிங்கிதமாய்
வீணும்பகைச்சேவை விழைவோன்பரிசனனும்

வேசையர்தமில்லம்விட்டு மேல்விடமுஞ்சென்றுக்கான்
காசுபணமற்பமுமாய்க் கனிசங்குலேந்துவிடும்

வேசையர்கள் வரலாறு.

மிக்கவிலையர்தர் வீடுசெந்தைக்கடையாம்
பக்கல்பொதுவம்பலமாம் படுக்கைவீடென்பதுகாண்

சந்திப்பாய்மெத்தைதாந் தண்ணீர்ப்பந்தலதாம்
பந்தமுறுதேகம் படித்துறையதென்றிடலாம்

சூதாடுசோலைதனில் தொடைகள்தண்ணீர்ப்பந்தல்
மீதிலேகட்டிவைத்த மிக்ககதலிமரம்

மையாடுங்கண்ணியவள் வாரணிந்தகொங்கைரண்டும்
கையாடும்பந்து கடைவெலுமிச்சம்பழமாம்

பாகமுறுசெவ்வாய் படிகமதிற்கொப்பாகும்
ஏகுமவள்மோகமது எட்டிக்கனியெனலாம்

பாசமுடனிவ்வாறு பாங்குடையார்திக்குபுரி
வேசையர்மேலாசைகொள்ளல் மேலவர்க்குமேன்மையல்ல

பெண்களால் பங்கமடைந்தவர்.

சந்திரனுமிந்திரனுந் தன்னுடலிற்பங்கமுற்றார்
சந்தனஞ்சேர்வாலி சடாசூரன்கீசகனும்

எண்ணரியவாழ்வுடைய இராவணனென்பவனும்
பெண்ணாலேபங்கமுற்றுப் பிராணலயமானார்கள்

சுந்தோபசுந்தரென்னுஞ் சூரரிருவர்களும்
அந்தமிகுமோகினிமே லாசைகொண்டுமாண்டார்கள்

வையகத்திலொப்பில்லா மாயிலனுமெழில்சேர்
தையலரைக்கண்டால் சவுரியமுமில்லாது

மானார்குணக்குறியிவ் வாறேதெரியாமல்
தானவர்மேல்மோகித்தால் தப்பாமல்துன்பம்வரும்

புருஷன்வாக்கிய பரிபாலனஞ்செய்தவர்.

ஆதியருந்ததியின் னுனுங்கவுசிகையுந்
சாதுகுணச்சாலை சந்திரவதியென்பவளும்

உத்தமியில்மிக்காக வோதுநளாயினியும்
பத்தாவின்வாக்கியபரி பாலனமேசெய்தவராம்

மூன்றுயுகத்திலும் யமனானோர்.

கிரேதாயுகத்திற கெடுகாவிரேணுகையாம்
திரேதாயுகத்தினிலே சீதையெனும்பெண்ணாகும்
துன்னுதுவாபரத்திற் றுரோபதையேகூற்றுவனும்
இந்நாள்கலியுகத்தி லில்லமெலாங்கூற்றுப்பெண்

பெண்களுக்கு சுவாதீனமில்லையெனல்.

பெற்றோர்கள்பேதையிலும் பின்பருவத்திற்புருஷன்
மற்றுவருமூப்பினிலே மைந்தர்களேகாப்பவராம்
முக்காலும்பெண்ணுக்கு முயர்ச்சியொன்றுமில்லாதால்
மிக்கானபெண்சன்மம் வீண்சன்மமாகுமென்றார்

புருடனேதெய்வமென்று போற்றுகின்றகற்புடையா
ளரிதாளவாண்சன்மத் ததிகமென்றுசொல்லினரே
பத்தாவேதெய்வமென்று பணிந்தேற்றுங்கற்புடையா
ளுற்றமழைபெய்யென் றுரைத்தாலுமாரிபெய்யும்
மேற்கவழகுடனே மேன்மையுள்ளமின்னாளோர்
புத்திரனைப்பெற்றவன்றே பேரழகுமேன்மைகளும்

பெண்கள் வரலாறு,

மேலானகன்னியர்கள் விரகத்திலேபழுந்திக்
கோலமெல்லாஞ்சீரழிந்து குரங்காகாப்பேருமில்லை
சதிராய்த்தன்னில்லைவிட்டுத் தனிவழிபோமின்னோர்க்குப்
பதிவிரதாதாபமில்லை பங்கம்வந்துநேரிடுமாம் ௩௬௰

சரசகுணமில்லாத தையலரைச்சேர்வதிலும்
விரைவாகச்சந்நியாச வேஷமுற்றல்நன்றாகும்
அன்பில்லாப்பெண்ணின்மே லாசைகொண்டுசேர்வதிலும்
முன்பாகச்சற்குணப்பெண் முலைகண்டாற்போதாதோ
பேரிளம்பெண்கள்பல பேரைபுணர்வதிலும்
காரிகையாம்வாலையொரு கன்னிதனைச்சேர்தல்நன்று
துற்கந்தம்வீசுமுடல் தோகையரைச்சேர்வதிலும்
நற்கந்தம்வீசுமுடல் நாரியரைக்கூடல்நன்றாம

பெண்ணொருத்திபேசினும் பேருலகமும்மடங்கும்
பெண்ணிருவர்பேசினும் பெருவானின்மீனுதிரும்
ஆலைவாரியுஞ்சுவறு மாயிழையார்மூவருக்கும்
பலபேர்தான்கூடிலென்ன பாடுபடுமோபூமி
ஆசைகொண்டான்போலே யபிநயித்துமேல்விழுந்து
பேசுகின்றவஞ்சப் பிரியமறியாமல்
அன்பில்லாவேசைமக் கன்புள்ளாளென்றெண்ணி
நம்பினவரெல்லாம் நாயினுங்கீழாவார்

கர்மகாண்டம்.

பூதலத்தோர்க்காகப் பொதியைமுனிநாயனுமுன்
காதலுற்றுச்சொன்னகர்ம காண்டத்தியல்புசொல்வாம்
சமயில்லா தார்க்குச் சவமாமகாரோயும்
கர்மவியாதிவந்த காரணத்தைச்சொல்லுகிறேன் தசம
செய்யவுருவழித்தல் சிவசெந்தைவதைத்தல்
வைதுதக்கைதாயை மனம்நோகவேபேசல்
நந்தவனமழித்தல் நாதாக்களைப்பழித்தல்
நந்தவனத்தில்மல ராதவரும்பூகொய்தல்
இட்டமுடனிப்பாவஞ் செய்தகொடியோர்க்குங்
குட்டநோய்வந்து கொடுமைசெய்யுமென்றனரே
நாகமுடனூர்வனங்கள் நல்லபறவைபட்சி
சாகவேகொன்ற சண்டாளரானவர்க்கு
குதிலாவலிக்கைவலி குமரகண்டன்முசலி
சதிராகவேவந்து சாருமெனவிசைத்தார்
உத்தமரைப்பழித்து உதாசினங்கள்பேசுவதும்
பத்தர்சித்தர்பாவம் பற்றித்தொடர்ந்ததினால்
ஆதிசிவதலங்க ளாதனைப்பழித்துக்
கோதுபடச்சினந்து கொடுங்கோபம்செய்வதினால்
கற்புடையமின்னார்மேற் காதலதுகொண்டதினால்
தப்பிதமாய்ப்பித்தந் தலைக்கேறியேபிதற்றி
பண்பாய்பலகிரி பதினெட்டுமெய்துமென்று
முன்பாகத்தட்சணு மூர்த்திமொழிந்தனரே

பச்சைமரங்கள்தனைப் பட்டைவெட்டியேயுரித்தும்
மிச்சந்தளிர்கொழுந்து வேர்முதலாய்வெட்டுவதும்

குளிர்ந்தமரத்திலேகாய் கொம்புதனைமுறித்தல்
அருந்தமலராப்பூவை யவைரதங்கிள்ளினதால்

மண்டைக்கரப்பன் வாயுவொருதலைநோய்
மண்டையிலேகுத்து மகத்தான பீனசங்கள்

மாறுக்கபாலத்தின் வாய்வானநோய்காணும்
விரூப்வந்தெய்துமென்றுவிளம்பினார்மாமுனிவன்

வித்தானதையழித்து மேலுமதைத்தின்றதினால்
பக்தியுடன்கன்றுக்குப் பால்விடாத்தோஷமதால்

பாலகரையழித்துப் பச்சைமரப்பிச்சுகளைக்
காலயிளம்பயிர்கள் தன்னையழித்ததினால்

மானார்க்குக்கெர்ப்பநோய் வருமவர்க்குமைந்தரில்லை
ஆனாலும்பாவிகள்தா னங்கரங்கஞ்சொல்லவொண்ணா

சூரியனைத்தோத்தரியாத் தோஷமதனாலும்
சீரிலுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுகெட்டதினால்

மடிப்பாய்ப்பிராணிகளை மாயவேசெய்வதினால
துடிக்கவுயிரோடதனைச் சுடுமணலிற்போடுவதால்

நல்லநிழல்மரத்தை நாருரித்துக்கொண்டதினால்
வல்லமையாய்ப்பச்சை மரங்கள்தனைவெட்டினதால்

பசித்தோரிருக்கவதைப் பாராமலுண்டதினால்
நிசமாய்ச்சுரதோஷம் சேருமென்றேயுரைத்தார்

மாதாபிதாவை மனம்நோகச்செய்ததினால்
வேதாந்தசற்குருவை மெய்நோகவைத்ததினால்

வீம்பானபேச்சுகளும் விசுவாசபாதகமும்
நாம்பெரியோரென்று பலரையும்பழித்தல்

தெய்வநிலையழித்தோர் தினந்தினமும்பொய்யுரைத்தோர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார்

ஊனானதைத்தின்ன உயிர்வதைகள்செய்வதினால்
மானாககற்பழித்துப்பூ மரங்கள்தனைவெட்டினதால்

புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியங்களைக்கெடுத்துத்
தண்ணீர்க்குளமேறி தன்னைபுதைத்துவிட்டும்

சிறப்பதளப்பதுவும் கிளைகள்குலையவிற்றும்
மறுப்படாநீரில் மலமூத்திரங்கள்விட்டும்

துராகதமாயிவ்வாறு துன்பங்கள்செய்தவர்கள்
கிராணிக்கழிச்சல்வந்து கெடுவாரெனவுரைத்தார்

பொல்லாக்கடுங்கோபர் பொய்யமிகுந்துரைக்குஞ்
சொல்லுவதைபின்மறுத்துத் தூஷணித்துப்பேசுபவர்

உண்டுமிகப்பேச்சுகளால் ஊராரைவைதவர்க்கும்
இண்டுமிண்டாச்சீவசெந்தை இளைக்கவேகொன்றவர்க்கும்

கண்ணைத்திறப்புத்து கண்டேசிவிப்புருதி
கனணத்திற்குலே கடிக்கனைபல்லாலே ௧௭௰

தந்தரோகங்கள் சகிக்கரியாவாய்ப்புத்து
தந்தரோகஞ்சூலை தப்பாமல்வந்திடுமாம்

சற்குருவைதூஷணித்தோர் தனைமையில்லாக்கோபத்தால்
முக்கியஞ்சேர்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்கும்

பச்சைமரமதனைப் பங்கமுறவெட்டினர்க்கும்
உச்சிதமாய்ப்பூவிலைகா யுதிரவடித்தவர்க்கும்

வண்டுகடிகரப்பன் மகத்தானகுட்டநோய்
என்றுமிவர்கட்குவந் தெய்துமென்றார்மாமுனியும்

பத்தர்சிவசித்தர் பரமசிவயோகிகளைச்
சித்தங்கலங்கவே செய்தகொடும்பாவிகட்கும்

வில்லாலுமம்பாலும் வெடிமருந்துகுண்டாலும்
கல்லாலும்பொல்லாக் கபடத்தாற்சீவசெந்தைக்

கொன்றகொடும்பாவிகட்கு கொடிதானமார்பணி
கண்டமாலைபிளவை கழல்வாதம்வந்திடுமாம்

காங்கிசையாப்பெண்கள்தமைக் கவனித்துப்பார்த்தவர்க்கும்
ஏங்கிமவர்போகத்தி லின்பமுற்றபாவிகட்கும்

மின்னாளைக்கண்டு விலகாமற்போனவர்க்கும்
பின்னவனைத்தூஷணமாய்ப் பேசிப்பழித்தவர்க்கும்

தப்பிதமாகப்பொய்ச் சத்தியங்கள்செய்தவர்க்கும்
மெய்ப்பானதெய்வத்தை மேவிநிந்தைசெய்தவர்க்கும் ௧௮௰

பலதாமுயிர்வதைகள் பண்ணுவதைகண்டிருந்தும்
விலக்காமற்பாத்திருந்த வேட்டைகாரயானவர்க்கும்

கண்ணில்வியாதிவருங் கண்ணொளிவுதானமறையும்
தொண்ணூற்றியாறுநோய் தொடருமென்றார்மாமுனியும்

பேருனதேதுமுயிர்ப் பிராணிதனைத்தான்பிடித்து
கூறுகத்துக்கிவைத்துக் கொண்டகொடும்பாவிகட்கும்

கோவதனைக்கொன்றவர்க்கும் கொடிதானகண்ணிவைத்து
சிவசெக்கைநீர்துறையிற் சேதமேசெய்தவர்க்கும்

அலறும்பிராணிகளை யழுக்கியதன்னுடைய
தலைபறுத்துமிக்கருடல் தன்னைபெருத்தவர்க்கும்

ஈனமிறக்கமற்ற பிராட்சதரையொத்தவர்க்கும்
ஆனந்தவாழ்வுவர் தழுக்குமெனவுரைத்தார்

இறந்தவேமுற்பிறப்பிற் சேயிழைமார்தங்களுக்கு
மருந்திடுசெய்து மயக்கிக்கர்ப்பழித்தவர்போல்

மயலானபெண்போலே மறுஜென்மத்தினிலவரும்
சயரோகமாகவந்து சார்குவானெனவுரைத்தார்

மார்க்கமதில்நிற்கு மரங்கள்தனைவெட்டினவர்
பூக்கமழுங்கமரத்தின் புறத்தொலியைத்தானுரித்தோர்

விண்ணிலேபூக்களை விருட்சங்களைமுறித்தோர்
ஊணுகின்றகால்முறித்தே யோடாமற்செய்தவர்கள் ௱௧௰

தம்பமாய்ச்சிவசெக்கின் சங்கங்களையுடைத்தும்
கொம்புகளைமுறித்துங் கொடும்பாவஞ்செய்தவற்கு

வாசங்கள்வந்து வழங்காமற்கால்கைகள்
கூதலுடனிருங் குளிரும்வருமென்றனரே

பலபேர்வயிறெரியப் பண்ணிவைத்தபாவிகட்கும்
கலஞ்சேர்பெரியோரை கெகெக்கப்பேசினர்க்கும்

மாறுமனக்கவடு வைத்துவெருபேரைச்
சீரழிவுசெய்தவர்க்குஞ் சிலர்பசிக்கவுண்டவர்க்கும்

சண்டாளத்துவங்கள் சதாகாலஞ்செய்தவர்க்கும்
மிண்டானகுன்ம வியாதிவந்துசூழுமென்றார்

பட்சிமிருகங்கள் பாம்புமுதலானதனை
மெச்சிப்பிடித்தடைத்தால் விலங்கவர்க்கேயெய்துமென்றார்
சாலப்பலவுயிரைத் தண்ணீரினண்டுகளை
காலைமுறித்தவர்க்குக் கால்கைமுடங்குமென்றார்

ஒப்பனையானவை.

வெடுக்கென்றசொல்லதனை மேலோரகத்தில்வைத்தால்
மடத்தையுங்கட்டியதில் வங்குரங்கைவைத்ததொப்பாம்
என்றுமல்வஞ்சகப்பெண் ணின்சொல்லைநிச்சயித்தால்
மண்குதிரைதனைநம்பி யாற்றினிற்சென்றதொக்கும்
அகாமியமுள்ளாரெனினு மறிவாளரைச்சேர்ந்தால்
மகாமேருவைச்சேர்ந்த மானதனைநிகர்ப்பார் நா

தன்னவரேயானாலுஞ் சார்பறிந்துசேர்தலன்று
துன்னுசுடர்விளக்கெனினுந் தூண்டுகோல்வேணுமதாம்
கடவுள்விதிவெல்லாக் கடவரெவராருமில்லை
மடவிலேயிட்டாக்கால் குடவிலேதாங்காதே
நிலையாநிமலனடி சேர்ந்தார்க்குறையுளதோ
மலைமேலிருப்பவரை வந்துபன்றிபாய்ந்திடுமோ
பெரியோர்திருவுளந்தான் பேதித்தலர்தீர்ப்பார்
கரிமலைசாய்ந்தால்மண் கட்டியதுதாங்கிடுமோ
கடந்தெவருஞ்சொல்லாத காலம்வெல்லப்போகாது
உடைந்தசங்கிற்சத்துமொரு வோசைபரியாதே
மட்டுகட்கு நல்லபுத்தி வர்ணித்துசொன்னாலும்
இட்டமுற்றதன்குணம்போச் செய்யாதுநற்குணந்தான்
கடையாரால்மேலோர்க்குக் கருமங்களுங்கிறலாம்
முடப்பல்லுதனைநீரில் முக்கலத்தைபறிக்கும
வலியோனைச்சார்ந்தவர்கள் மற்றெவர்க்குமஞ்சுவரோ
மலையோதான்வெக்கானுங் குருடனைப்பமாட்டானோ
தலையானோனைச்சேர்ந்தால் தாழ்வில்லைதாழ்வுவந்தால்
புலிக்கிரையைப்பட்டுக்கிளிக்காசைபட்டதொக்கும்
மெலிவாகிலுமேலோர் மேற்செயலைசெய்வார்
புலிபசித்தாலெப்போதும் புல்லருந்தமாட்டாதே

விற்பனமேலோர்கள் மெலிவாகிப்போகிலென்ன
குப்பையிலேபோட்டாலுங் குன்றிமணிமங்காதே

நேசருடன்பிறந்தோ ரிரண்டுபேர்வேறுபட்டால்
ஊசியிலேகப்பாகி நூல்நுழையவாறாகும்

ஏர்க்காதவைசெய்தா லிகழ்ச்சியென்றும்போகாது
ஊர்வாயைமூட வுலைமூடிதானுமுண்டோ

எட்டாக்கனியதனுக் கோசைபட்டுமென்ன
தொட்டுகெட்டாதவித்தை சொட்டுபோட்டால்வருமோ

காட்டுச்சுரைக்காய்கறிக்கு காட்டினாலெய்துமது
ஏட்டுச்சுரைக்காய்கறிக் கெய்தாதொருநாளும்

மாறுபாட்டுக்காரன் வாக்குநீசமென்றறிந்தால்
ஏறிவிட்டேயேணிதனை யெடுத்துவிட்டவாறாகும்

வாழ்வுடையோர்முன்னே வறுமையுற்றோர்சொல்லிலேயா
ஏழைசொல்லம்பலமு மேறாதுகண்டீரே

கொடையாளியேவறுமைக் குள்ளாகிலுமிவன்
கடுகுசிறுத்தாலுங் காரமதுபோகாதே

விற்பனக்குருமூடன் மேலாம்பரமானால்
குப்பையுயர்ந்து கோபுரமுந்தாழ்ந்ததொக்கும்

இட்டமுறவாழ்ந்தோர்க் கியல்புதப்புங்காலம்
கெட்டவர்க்குற்றோர் கிளைதனிலுமில்லையில்லை

இணக்கமுடன்நல்லபுத்தி யெவ்வளவுங்கேளார்க்குரைத்தல்
பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்தவாறாகும்

காலிபயிர்தின்னமற் காப்பதுவேவேலியுமாம்
வேலிபயிர்தின்றால் விளைவதொருபோதுமில்லை

கலியாணகாரியமு நில்லாதுமந்திரத்தால்
கலைப்பார்கலைத்தாக்கால் மூலைப்பால்மருந்தல்லவோ

கூடாவொழுக்கமனீர்.

பார்ப்பனவில்திரும்பிப் பாராருரைத்தமொழி
கேளாய்மருவிகள மேதுவமேசொல்வாளாம்

கள்ளன்போல்மற்கட்டிக் கவிழ்ந்தாலுமன்புரிவாள்
உள்ளன்புக்கார ருடன்போயுஞ்சண்டைசெய்வாள்

ஆடையுடனுபரண மடைக்கால்முதல்கொடுத்தால்
நாடாள்புரங்கையி னுலதனைத்தட்டுவளாம்

அங்கையாற்றெட்டா லாடவரம்போற்சீறி
சங்கைகெடப்பேசிச் சத்துருவைபோல்பார்ப்பாள்

அயலாருடனேவினை யாடியேகூடுவளாம்
மயலாய்க்கணவன்பிடித்து மருவச்சரசஞ்செய்தாள்

மெய்யதிலேநோய்கள் மிகவெனவுந்தர்க்கமிட்டு
பொய்யாணைவிட்டுப் புறங்காட்டியேபடுப்பாள்

முந்தியுறங்கிப்பெரு மூச்சுவிட்டேஎத்தனையோ
சந்தோஷஞ்சொன்னாலுஞ் சற்றேனுமேயிரங்காள்

ஆரிடத்திற்போடாவென் றவன்கொடுப்பதையெறிந்து
சீறிச்சினந்து தெய்வமேயென்றழுவாள்

நாடானதிற்பெண்கள் நான்குவகைச்சாதியிலுங்
கூடாவொழுக்கங் குறையிதுவாமென்றனரே

அபியுற்றமகளிர்.

ஆடவர்களெக்காலு மாசைகொண்டபெண்குறிப்புங்
கூடாவொழுக்கக் குறிப்பதனைச்சொல்லுகிறோம்

பலநாளுமாடவனைப் பார்த்தகண்ணாயிருப்பாள்
தலைவனவனைப்பார்க்கில் தலைகவிழ்ந்துமேசிரிப்பாள்

உள்ளன்புகாட்டட னோங்கிப்பெருமூச்சுவிட்டாள்
கள்ளாக்குழந்தை தனைத்தழுவிமுத்தமிட்டாள்

பாங்கியரைத்தழுவாள் பாங்கனைப்பார்த்துநகைத்துப்
பாங்காய்த்தலையசைத்துப் பல்லைக்கடித்துறுக்கி

பிறரெவரையுந்திருத்திப் பேசுவதுபோல்பேசிப்
பிறகால்போய்மூக்கைப் பிசைந்துதும்மல்தும்மி

தலைவனன்புகத்தாலுந் தன்னுடன்பொய்யன்று
தலைவன்மொழிகேட்டுமவன் தன்றொழிலையுமகிழ்ந்து

ஆண்டவன்வீட்டுக் கடிக்கடிதான்போவதல்லாய்
ஆண்டவனைக்கண்டா லறகசளிசொறுதலும்

கொம்பனையார்க்குள்நன்பு குறிப்பறிதலாகுமென்று
முன்பாகநூலுகளில் முன்னோருரைத்தனரா

பெண்களுடையதத்துவம் பத்துக்கும்விபரம்.

மிக்கயின் னூலில் மேன்மைகுறிப்பறிய
தக்கதொருபெண்கள்பத்து தத்துவத்தைச்சொல்லுகிறோம்

பொன்னிறமும்மல்லிகையின் பூமணமுந்தாமரையும்
வண்ணமலர்மகளும மாசற்றமுர்தமொழி

தனதானியவாழ்வுஞ் சார்ந்தனசேகரமும்
இனமோங்கிவாழ்பவ ளிவளதெய்வதத்துவமாம்

இரக்கம்வணக்க மின்பமுறுதேகம்
சிறக்கவேதானதர்மந் தெய்வவிசுவாசம்

வன்கொலைகண்டஞ்சுமவள் மானிடர்க்குள்தத்துவமாம்
முன்சொலலும்நூலதனில் முறையிலுரைத்தனரே

நித்திரைமிகுத்தல் நெடுமூச்சுசோம்பல்களும்
மெத்தவேகொட்டாவி விடெல்லாம்போய்த்திரிதல்

சுத்தமில்லாதேகஞ் சுசியில்லாப்போசனமும்
நத்துகின்றமின்னாள் நரகதத்துவமாகும்

ஆற்றில்குளத்தி லலைகடலிலேயமினி
லேற்றமிகுபெண்களுட னென்றும்விளையாடமனம்

நாணமில்லாமை யெந்நாளுங்கொடுங்கோபம்
வானுதலாலேயியக்க மாதொன்றுசொல்லுவதாம்

பரிமளசுகந்தாதி பகிரங்கினவாபரணம்
சரசசங்கீதவித்தை தன்னில்வெகுவிருப்பம்

சார்ந்தினமுந் தர்மசிக்ஷைகற்புடையாள்
காந்தர்வத்துவத்தின் கன்னியென்றுசொல்லிடலாம்

வெட்கமில்லாமை மிகுத்தபலபோசனமுந்
துற்கந்தவாசந் துடியானவார்த்தைகளும்

ஊட்டினசரீர முடையழுக்குமாமிசமு
மூட்டமதுவுண்ணல் முறையில்லாதுர்நடத்தை
நித்திரையில்லாமையிவை சேர்ந்தபெண்ணுமேபேயின்
தத்துவமாமென்று சாற்றினார்முன்னோர்கள்

அக்கினிக்கண்ணு மழகுசற்றுமில்லாமை
வக்கணையாயாடவரை வலியப்பிடித்திழுத்தல்

மாறுமாடாணமன மல்லுகட்டிப்புணரும்
காரியவள்தானே ராட்சதரின்தத்துவமாம்

ஆரிடத்திலானலு மன்புசற்றுமில்லாமை
மாறிமாறிப்பார்த்தால் மயிர்துவுக்குறுதலே

வேறுமுகம்பசியு மிகுந்தபயமுடையாள்
காகத்தின்தத்துவத்தில் கன்னியவளாகுமென்றான்

கூடுகின்றவாடவரை கூர்ககத்தாற்பல்லதனுல்
காடிக்கடிப்பதுவு காணஞ்சல்றில்லாமை

கிறமதுவும்பங்கமதாய் நேத்திரத்தால்மருட்டால்
குறங்கினுடதத்துவத்தின் கொம்பனையாளாகுமென்றான்

திண்டுமிண்டாணசொல் தேககத்தமில்லாமை
வண்டிவெடுத்தகுரல் மல்லுகட்டிப்புணர்தல்

மழுமாரிகண்டவரை வலியப்பிடித்திழுப்பாள்
கழுதையின்தத்துவத்தின் கன்னியவளாகுமென்பார்

வையகத்திலேமேலா மணவாளன்சொன்னபடி
மொய்க்குழலார்சாதி மூன்றின்குறியுரைப்போம்

மானைநிகர்த்தவிழி வனசமலர்முகமுந்
தேனைநிகர்த்தமொழி தேமற்படர்ந்தவுடல்

சுருண்டுநெறித்தகுழல் தும்பிப்படைநடையுந்
திரண்டகோவைகனிவாய் செண்பகப்பூந்தேகமுமாம்

மின்னிடையுந்தென்ன மிளம்பாளைவாசமுமாய்
அன்னநடையு மழகில்ரதியெனவும்

வட்டமாய்த்தங்கநிற மாணிளமார்பும்
இட்டமுறுகல்விக் கிசை[?]ந்திட்டசற்குணமும்

தர்க்கமிடுமின்கோபி சாப்பாடுமற்பமதாம்
இக்குறியின்மாதவளு மின்பமுளமான்சாதி

பெட்டைக்குதிரைசாதி.

உயர்ந்துகுளிர்ந்தவுச்சி யுட்குழிந்தகண்ணகண்கள்
உயர்ந்துபருத்தகொங்கை யுதடுபெருத்திருக்கும்

சாலப்பருத்தமயிர் தந்தமேனிகண்டிருக்கும்
தால்விடைபருத்துத் தாருமேயாலேவுமிரும்

அடக்கமொன்றுமில்லாமை யல்குல்பனைத்திருக்கும்
மடக்கொடியாள்பேசுகின்ற வாய்மைகுளறுதலாம்

போசனத்திலேபிரியம் புணர்ந்தவர்மேலும்பிரியம்
வீசும்புலால்நாற்ற மிரவுபகல்நித்திரையும்

தீராவெறுப்புஞ் சிவந்தபருவுந்தீங்
கூறுமைமாதுபெட்டைக் குந்தாரியென்றுசொல்லினரே

பிடியானைச்சாதி.

சாலப்பருத்தநெற்றி தாடைசெவிநாசி
காலுடனேகைத்தாளுங் கழுத்துமிகப்பருத்து

கருண்டுசிவந்தமயிர் தொங்குமதரமுமா
முரண்டுநிதஞ்சண்டை மொழியுமிடிபோலாய்

அல்லும்பகலுங்கல்வி யானதிலேசிந்தையுமாய்
பல்லுமிடையுளதாய்ப் பாவத்துக்கஞ்சாமை

யார்க்குமனுகூலி யானைமதகாரி
பார்க்கும்பணிரண்டு அங்குலமாமல்குலது

விடியளவுஞ்சண்டைவிடாள் வெட்கத்துக்கஞ்சாளாம்
பிடியானைசாதியென்று பேசினார்முன்னோர்கள்

இன்னஞ்சிலநீதி யெடுத்துமேகூறவென்றால்
வன்னமாயிந்நூல் வளருமெனமுடித்தேனே

வாழி.

ஐங்கரனும்வாழி ஆறுமுகன்வாழி
மங்கைபாகன்வாழி மாயன்பிரமன்வாழி
தூயமுனிவோர்வாழி சுத்தசைவர்வாழி
நேயசெங்கோல்செலுத்தும் நிருபர்மிகவாழி
கற்புடையமாதர் கவிவாணர்தாம்வாழி
விற்பனமாயிதைப்படிக்கும் வித்தகரும்வாழியவே

மதநீதிகாதல்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அட்டவணை.